Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 105

ஞாயிற்றுக்கிழமை
10 மார்ச் 2024

மாசி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

METABOLOGY

## Biotech Company Metabology SL

# வடக்குக்கு வாய்த்த வரப்பிரசாதம்

வட மாகாணத்தில் முதல்முறையாக ஊட்டச்சத்து மற்றும் மருந்து உற்பத்தி வசதியை அறிமுகம் செய்கின்றது **Biotech Company Metabology SL.** இந்தத் தொழில் முயற்சிக்காக சுமார் 20 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்துள்ள **Biotech Company Metabology SL** நிறுவனம். யாழ்ப்பாணத்தில் உள்ள இளையோருக்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்துவதையும். உள்ளூர் விளைபொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்பையும் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

METABOLOGY












யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகவும். பிரித்தானியாவில் பிறந்தவருமான அர்னன் மனோஜ் ஜோஹில் என்ற இளைஞரே **Biotech Company Metabology SL** நிறுவனத்தின் தலைமை அதிகாரி. பிரித்தானியாவில் பல்வேறு தொழில் நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்திவரும் அர்னன் மனோஜ் ஜோஹில். ஊட்டச்சத்து மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனத்தையும் ஆரம்பித்து. அந்தத் துறையிலும் கோலோச்சத் தொடங்கியுள்ளார். வருடமொன்று சுமார் 104 மில்லியன் பவுண்ட்ஸ் வருமானத்தை ஈட்டும் **Biotech Company Metabology SL** நிறுவனத்தின் தலைமை அதிகாரியான அர்னன் மனோஜ் ஜோஹில், தன் பூர்வீக தேசத்தில் தனது நிறுவனத்தின் கிளையைத் திறந்து. தன் இன மக்களுக்கு தொழில்வாய்ப்பினையும். உள்ளூர் விலை பொருட்களுக்கான சந்தை வாய்ப்பையும் ஏற்படுத்த எண்ணினார். அதன் விளைவாக யாழ்ப்பாணத்தில் நேற்று 09 ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்ட **Biotech Company Metabology SL** நிறுவனத்தின் கிளை.

இந்தக் கிளையை வடக்கு மாகாணத்தில் நிறுவும் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டே ஆரம்பமாகிவிட்டன. 2023 ஆம் ஆண்டு இதன் பூர்வாங்க பணிகள் நிறைவுற்றதைத் தொடர்ந்து. தொழிற்சாலைக்கான நவீன உபகரணங்கள் யாவும் பிரித்தானியாவிலிருந்து நேரடியாக. மிகுந்த பொருட்செலவின் மத்தியில் தருவிக்கப்பட்டு பொருத்தப்பட்டன.

சர்வதேசத் தரம்வாய்ந்த மருந்துகளையும். ஊட்டச்சத்து மாத்திரைகளையும் இயற்கையில் விளையும் நம் உள்ளூர்ப் பழங்கள். மூலிகைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரித்து ஏற்றுமதி செய்வதே **Biotech Company Metabology SL** நிறுவனத்தின் இலக்காக இருக்கின்றது. இந்தத் திட்டத்தினை அடுத்தபடிநிலைக்கு கொண்டு செல்லவும். விரிவுபடுத்தவும் முதலீட்டுச் சபை அந்தஸ்தைப் பெறும் முயற்சியில் நாட்டில் உள்ள பல முன்னணி வர்த்தக நிறுவனங்கள். பங்குதாரர்களோடு **Biotech Company Metabology SL** ஆலோசித்து வருகின்றது. இந்த நிறுவனத்தின் மூலம் நமது பிரதேசத்திலேயே சர்வதேசத் தரம் வாய்ந்த மருந்துகள். ஊட்டச்சத்து மாத்திரைகளை நாம் உற்பத்திசெய்யமுடியும். அத்தோடு இலங்கையர்கள் யாவரும் **Biotech Company Metabology SL** நிறுவனத்தின் உற்பத்திகளை மானியவிலையிலும் பெற்றுக் கொள்ள முடியும். பொருளாதார நெருக்கடியால். இலங்கையில் மருந்து வகைகளுக்கு பெரும் நெருக்கடி நிலவும் இந்தக் கால கட்டத்தில் மானிய விலையில் சர்வதேசத் தரம்வாய்ந்த மருந்து வகைகளையும். ஊட்டச்சத்து மாத்திரைகளையும் பெறுவதென்பது ஒரு வரப்பிரசாதமே. உலகளாவிய ரீதியில் இப்போது சீனாவும். இந்தியாவுமே மருந்து வகைகளை விநியோகிப்பதில் முன்னணியில் திகழ்கின்றன. இந்த நிலையில் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள **Biotech Company Metabology SL** நிறுவனம். அந்தப் பட்டியலில் இலங்கையையும் உள்ளடக்கும் முயற்சியை முன் னெடுக்கும்.

"அடுத்த தலைமுறையினர் சுகாதாரம் மற்றும் மருந்து உற்பத்தி மூலம் செயல்படும் வணிகத்துக்கான அடித் தளத்தை நாங்கள் உருவாக்குகிறோம். இந்த முதலீடு இலங்கையர்களின் கைகளில் கைத்தொழில் மற்றும் விஞ்ஞான சக்தியை வழங்குவதற்கான வளங்களை எமக்கு வழங்குகிறது. அதேவேளையில் உலகளாவிய விளையாட்டுத் துறையினரிடையே 'பயோடெக்' துறையில் வலுவான அடித் தளத்தை உருவாக்க தேவையான திறமைகளையும் ஈர்க்கும்." என்று நம்பிக்கையோடு சொல்கிறார் **Biotech Company Metabology SL** நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அர்னன் மனோஜ் ஜோஹில்.

இலங்கையர்களாக. தமிழர்களாக நாம் உலக அரங்கில் மீண்டும் ஒருமுறை பெருமிதம்கொள்ளும் வாய்ப்பை **Biotech Company Metabology SL** நிறுவனம் வழங்கியுள்ளது.



METABOLOGY

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையைக் கூற தலைப்பை மாற்றுக!



## கோத்தாபயவுக்கு விகாராதிபதி ஆலோசனை

கொழும்பு, மார்ச் 10

**‘இலங்கைத் தீவுக்கு ஏன் இடி விழுந்தது?’ என்ற தலைப்பில் அல்லது ‘பொருளாதார வீழ்ச்சிக்கு நாமே வித்திட்டோம்’ என்ற தலைப்பில் நூல் எழுதி அதனை மக்களுக்கும் உலகத்துக்கும் ராஜபக்சவினர் அறியப்படுத்த வேண்டும் என்று மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தம்மரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.**

கோத்தாபய ராஜபக்ச வெளியிட்ட நூல் தொடர்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

“அன்று இலங்கையில் மின்சாரம், எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருள்கள் சேவைகள் கிடைக்காது பொது மக்கள் அவதியுற்றனர். பல உயிரிழப்புகளும் கூடப் பதிவாகின. பொதுமக்களுக்குத் தீர்வுகள் கிடைக்கப்பெறாத பட்சத்திலேயே வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை தீவில் அனைவரும் ஒன்று திரண்டு ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டனர். இலங்கையை இவ்வாறான தொரு நிலைக்குத் தள்ளியமை தொடர்பாக நூல் எழுதி அதனை மக்களுக்கும் உலகத்துக்கும் அறியப்படுத்துங்கள்” என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# எச்சரிக்கை மட்டத்தை அடைந்தது வெப்பநிலை

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையின்படி தற்போது நிலவுகின்ற வெப்பநிலையானது எச்சரிக்கை நிலையை அடைந்திருக்கின்றது என்று இடர் முகாமைத்துவத் திணைக்களம் அறிவித்துள்ளது. எதிர்வரும் நாள்களில் அதிகளவான வெப்பம் நிலவக் கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. இந்த வாரத்தில் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. விளையாட்டுப் போட்டிகளை காலை மற்றும் மாலை வேளைகளில் திட்டமிடுவதுடன் மு.ப.10 தொடக்கம் பி.ப. 3 மணி வரை மைதான விளையாட்டுக்களைத் தவிர்க்கு மாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

# ஐ.ம.சக்தியின் கூட்டணி 15ஆம் திகதி உதயம்!

## தேசிய மக்கள் சக்திக்கும் அழைப்பு

கொழும்பு, மார்ச் 10

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பரந்துபட்ட அரசியல் கூட்டணி எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். தேசிய மக்கள் சக்தியினரும் இந்த அரசியல் கூட்டணியில் இணைந்து கொள்ளவேண்டும் - இவ்வாறு சுதந்திர மக்கள்சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (எ-இ)

# 80 ஆண்டுகளாக உழைக்கும் சலவை இயந்திரங்கள்

1943ஆம் ஆண்டு பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ‘மான் லவ் அலியட்’ நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட சலவை இயந்திரங்களே வெலிக்கடைச் சிறைச்சாலையில் தற்போதும் பாவிக்கப்படுகின்றன என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சலவை இயந்திரங்கள் இப்போதும் சிறந்த முறையில் துணிகளைச் சலவை செய்வதாகவும் இந்தச் சலவை இயந்திரங்கள் தற்போதைய நவீன சலவை இயந்திரங்களை விட பத்து மடங்கு துடிப்பான உருக்கால் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சலவை இயந்திரங்களில் ஒரே தடவையில் பத்துக் கட்டில் விரிப்புகளை சலவை செய்யமுடியும். இத்தகைய சலவை இயந்திரங்களில் இரண்டு வகைகள் உள்ளன. மின்சாரத்தின் மூலம் உடைகளை உலர்த்தி அழுத்தக்கூடிய இயந்திரங்களும், சிரட்டைக் கரி மூலம் உடைகளை உலர்த்தி அழுத்தக்கூடிய இயந்திரங்களும் உள்ளன. சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்கும் கைதிகள் மின்சார இயந்திரத்திலும், கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிப்பவர்கள் சிரட்டைக்கரி இயந்திரத்திலும் உடைகளை சலவை செய்ய அனுமதிக்கப்படுகின்றனர் என்றார். (ம-6)

# ரணிலுக்கு ஆதரவு வழங்க கொள்கைச் சிக்கல்களாம்!

## மஹிந்த, பஸில் கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியிலான பிரச்சினை உள்ளது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவும், ஸ்தாபகரான பஸில் ராஜபக்சவும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவுக்கும், மஹிந்த ராஜபக்ச மற்றும் பஸில் ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

‘அதிகாரப்பகிர்வு மற்றும் அரச சொத்துகளை தனியார் மயப்படுத்தல் போன்ற செயற்பாடுகளால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முடியாத கொள்கை ரீதியிலான பிரச்சினை உள்ளது’ - என இதன்போது ராஜபக்சக்கள் இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர். பொலிஸ் அதிகாரத்தைத் தவிர ஏனைய அதிகாரங்களைப் பகிர்வது பிரச்சினை அல்ல எனவும், சர்வதேச நாணயநிதியத்தின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியது கட்டாயம் எனவும் இதற்கு ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

அத்துடன், பொதுஜன பெரமுனவின் கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாமை தொடர்பிலும் ராஜபக்ச தரப்பில் இருந்து அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. அதேவேளை, ரணிலை ஆதரிக்கும் முடிவை கட்சி உறுப்பினர்கள் எடுக்கும் பட்சத்தில், மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோரின் வெற்றிக்காக உழைத்ததுபோல ரணிலின் வெற்றிக்காக உழைப்பதற்குத் தான் தயார் என இதன்போது பஸில் கூறியுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் இறுதி இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை, எனினும், மீண்டும் இரு தரப்பினரும் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-44)






# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்., மார்ச் 10

ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், தென்னகத்தாரை விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் உறுப்பினருமான மகாலிங்கம் விவேகானந்தன் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டமைக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று பி.ப. 3 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள ஸ்ரீ பழனி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-131)

# கோத்தாவின் முட்டாள்தனமே பதவி பறிபோவதற்குக் காரணம்



## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதிப் பதவியிலிருந்து வெளியேற்ற தேசிய மற்றும் சர்வதேச சூழ்ச்சிகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. அவரது முட்டாள்தனமான நிர்வாகத்தாலேயே அந்த நிலைமை ஏற்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பொருளாதாரப் படுகொலையாளி என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள் ளது. ஆகவே கடந்த காலம் பற்றி புத்தகம் எழுதுவது பயனற்றது. ராஜபக்சர்களின் வியாக்கியானத்தை நாட்டு மக்கள் கவனத்தில்கொள்வதில்லை.

தேசிய மற்றும் சர்வதேசத்தின் சதியால்தான் ஜனாதிபதிப் பதவியில் இருந்து வெளியேறப்பட்டார் என்று கோத்தாபய ராஜபக்ச குறிப்பிடுவது நகைப்புக்குரியது - என்றார். (எ-இ)


## பதவி வெற்றிடங்கள்

**முகாமைத்துவ பணியாளர்கள் (பெண்கள்) தேவை**

13.03.2024, 14.03.2024, 15.03.2024 திகதிகளில் நேர்முக பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களுடன் நேரில் பிரசன்னமாக இருக்க வேண்டும்.

1. க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி, சாதாரண தர பரீட்சையில் கணிதம் ஆங்கிலம் (Credit Pass) பெற்றிருத்தல் வேண்டும்.
2. கிராம சேவையாளரின் சான்றிதழ்
3. பிறப்பு சான்றிதழ் பிரதி.
4. ஆள் அடையாள அட்டை பிரதி.
5. வயது எல்லை 21-30

➤ ஆரம்ப சம்பளம் 25000+EPF ETF வழங்கப்படும்.

மேலே கூறிய தகமையுள்ளவர்கள் 758 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் இயங்கும் அலுவலகத்திற்கு பிரசன்னமாக இருக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 105

ஞாயிற்றுக்கிழமை
10 மார்ச் 2024

மாசி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கள்ளநெருப்புக் கொளுத்தியெண்டாலும் பொய்க்கேஸ் போடுறதில எங்கட பொலிஸ்காரர் கெட்டிக்காரர்தான் பாருங்கோ"

## பொறுமையின் விளிம்புக்கு எம்மைத் தள்ளுகிறீர்கள்!!!

### வெடுக்குநாறி விவகாரம்: சரவணபவன் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

அமைதியாக எமது வழிபாடுகளை முன்னெடுக்கத் தடைகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்தி எம்மை மீண்டும் மீண்டும் சீண்டுகின்றீர்கள். பொறுமைக்கும் எல்லையுண்டு. எம்மைச் சீண்டுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பு - இவ்வாறு எச்சரித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன்.

வெடுக்குநாறி ஆலயத்தில் 15

## இந்துக்களுக்காகத் துடிக்கும் பா.ஜ.க. ஈழத்தில் அமைதியாக இருப்பது ஏன்?


### வெடுக்குநாறிமலை சம்பவம் தொடர்பில் சீமான் ஆவேசமாகக் கேள்வி

சென்னை, மார்ச் 10

பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலும் வாழும் இந்துக்களுக்குப் பாதிப்பு என்றால் பாய்ந்து பாதுகாக்கத் துடிக்கும் இந்திய பா.ஜ.க. அரசு, ஈழத்தில் இந்துக்களுக்கு ஒன்றென்றால் ஏன் வாய்திறப்பதில்லை? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் நாம் தமிழர் கட்சியின் தலைமை 15

வெடுக்குநாறிமலையில் நெருப்புமூட்டிய அடையாளம்:

## ஆலயத்தினரைச் சிக்கவைக்க திட்டமிட்ட சதிமுயற்சியா?



வவுனியா, மார்ச் 10

வெடுக்குநாறிமலை ஆலயச் சூழலில் நெருப்புமூட்டியமைக்கான அடையாளம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆலய நிர்வாகத்தால் நேற்றுமுன்தினம் நெருப்பு மூட்டப்படாதபோதும் தற்போது இவ்வாறு காணப்படுவது திட்டமிட்ட சதிச் செயலாக இருக்குமோ என்று ஆலயத்துக்குச் சென்று வந்த மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

15

பெண்கள் உதைபந்தாட்டம்

## தேசிய மட்டத்தில் மகாஜன சம்பியன்

கொழும்பு, மார்ச் 10

பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் 18 வயதுப் பெண்கள் அணிகளுக்கிடையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது. 15



முதன்முறையாக

## மருந்துவில்லைகள் உற்பத்தி; யாழில் நேற்று ஆரம்பிப்பு




யாழ்ப்பாணம், மார்ச் 10

மருந்துவில்லைகள், ஊட்டச்சத்து வில்லைகள் என்பவற்றை யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக உற்பதிசெய்யும் 'மெட்டோபொலொஜி' என்ற நிறுவனம் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து 15

## 110 ஏக்கர் இன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்தில் 68 ஏக்கரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 41 ஏக்கரும் பாதுகாப்புத் தரப்பினர் வசமிருந்து இன்று விடுவிக்கப்படவுள்ளது. ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்கவின் பங்கேற்புடன் யாழ். மாவட்டச் செயலகத்தில் இன்று காலை காணி கையளிப்பு நிகழ்வு 15

## வடக்கின் பெரும் போரில் மகுடம் சூடியது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை 10 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றியைப் பதிவு செய்தது யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி.

வடக்கின் பெரும்போர் என்று அழைக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையிலான 117ஆவது துடுப்பாட்டப் போட்டி கடந்த வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி 15




## சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘கப்’ ரக வாகனம்மோதி ஸ்தலத்தில் மூவர் பலி

கொழும்பு, மார்ச் 10

அநுராதபுரம் - ரம்பேவ பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியில் சென்ற பாதசாரிகள் மீது கப் ரக வாகனமொன்று வேகமாக வந்து மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் ஆண்கள் மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் பெண்கள் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-44)

## திருட்டுகளைத் தடுக்க கண்காட்சியில் கமரா

யாழ்ப்பாணம், மார்ச் 10

விமானப் படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.முற்றவெளியில் இடம்பெற்றுவரும் கண்காட்சியில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

திருட்டு மற்றும் குற்றச்செயல்களைத் தடுக்கும் முகமாக அவை பொருத்தப்பட்டன. விமானப்படையின் இந்தக் கண்காட்சி மற்றும் சாகச நிகழ்ச்சிகளைப் பார்வையிட பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## தந்தை, மகன் விபத்தில் சாவு

கொழும்பு, மார்ச் 10

கொழும்பு - ஹைலெவல் வீதியில் கொஸ்கம, மிரிஸ்வத்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கொஸ்கம பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயது தந்தை மற்றும் 8 வயது மகன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சிமெந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று கொஸ்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## 4 லட்சம் மாணவிகளுக்கு போசணைக் குறைபாடு!

கொழும்பு, மார்ச் 10

இலங்கையில் 5 முதல் 19 வயது வரையிலான 4 லட்சத்து 10 ஆயிரம் மாணவிகள் போசணைக் குறைபாடு காரணமாக எடை குறைந்துள்ளனர் என்று மருத்துவர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் நிபுணத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளதாவது:

பிரித்தானிய ‘லான்செட் மெடிக்கல் ஜேர்னல்’ இதழின் ஆய்வின் படி உலகில் போசணை குறைபாடு காரணமாக உடல் எடை குறைந்தவர்கள் அதிகம் இருக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளது. உலகளவில் உடல் எடை குறைவால் பாதிக்கப்பட்டவர்களில் பெண்களின் வீதம் இந்தியாவுக்கு அடுத்தபடியாக இலங்கையில் உள்ளது.

போசணைக்குறைபாட்டால் பாடசலைப் பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவது மட்டுமன்றி, மனவளர்ச்சி குன்றும் ஆபத்தும் உள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் தலைமுறை உருவாகும்- என்றார். (எ-இ)

## மெய்வன்மைப் போட்டிகள்

கைதடி, மார்ச் 10

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் பிரதி அதிபர் திருமதி சற்குணேஸ்வரி தபேந்திரன் தலைமையில் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.பிரதீபா யாழ். மாவட்ட செயலக இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர் மு.கஜோதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், மார்ச் 10

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அதிபர் எஸ்.பேரின்பநாதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய கணக்காளர் திருமதி எஸ்.சுதர்சினியும், சிறப்பு விருந்தினராக பழைய மாணவி எலிசா பாக்கியதேவியும் கௌரவ விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் ஏ.மனோரஞ்சிதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-159)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரம் வழக்கம் போல இருக்கும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும். செலவுகளால் கையிருப்பு கரையும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். தேவைகளை நிறைவேற்றுவதில் கூடுதல் செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தெய்வ வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழிபாடு நலம் சேர்க்கும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கும் கையிருப்பு கரையும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் வழியில் சங்கடங்கள் ஏற்படும். சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். பணவரவுக்கும்வாய்ப்புஉண்டு. மனவருத்தங்கள் நீங்கும்.

**மகரம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கலகலப்பான சூழ்நிலை காணப்படும். காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படும். கவனமாக இருக்கவும். கடன் தொகை திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். வீண்மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

## மனமாற்றம் மூலம் புதுவாழ்வைப் பெறுவோம்




மனமாற்றம் என்பது ஒரு பயணம். அது இருளிலிருந்து ஒளியை நோக்கிய, பாவத்திலிருந்து புனிதத்தை நோக்கிய, சாவிலிருந்து வாழ்வை நோக்கிய, வெறுப்பிலிருந்து அன்பை நோக்கிய ஒரு முடிவில்லாப் பயணம்.

மனிதன் புனிதனாக வாழ வேண்டுமென்பதே மனிதனை உண்டாக்கிய இறைவனின் தணியாத விருப்பமாக இருந்தது. ஆனால் இறைவன் எதிர்பார்த்த பதில் மனிதனிடமிருந்து கிடைக்கவில்லை. மனிதனில் உண்மையான அன்பு கொண்ட இறைவன் தன்னுடைய மகன் கிறிஸ்து மூலம் தனது செய்தியை மனிதனுக்கு வெளிப்படுத்த அவரை இவ்வுலகுக்கு அனுப்பினார். மண்ணுக்கு வந்த இறைமகன் காலம் நெருங்கியபோது அந்த மாபெரும் செய்தியை உலகுக்கு வெளிப்படுத்தினார். ‘மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது’ (மத் - 4:17).

தனது பணியின் தொடக்கத்திலேயே மனமாற்றத்துக்கு அழைத்த இயேசு அதற்கான பதிலை எதிர்பார்க்கப்பட்டவர்களிடமிருந்து பெறமுடியவில்லை. காரணம் அவர்கள் இவ்வுலகை அதிகமாகப் பற்றிக்கொண்டிருந்தார்கள். எமது வாழ்வில் அமைதியில்லை, உள்ளத்தில் மகிழ்ச்சியில்லை. நெஞ்சிலே நிம்மதியில்லை. இதிலிருந்து நாங்கள் விடுபட வேண்டுமெனில், வாழ்வைக் காணவேண்டுமெனில் இயேசுவின் மனமாற்றத்துக்கான அழைப்புக்கு நாம் செவிமடுக்க வேண்டும்.

அருட்தந்தை றமேஸ் அ.ம.தி

## தீப்பற்றியது மோ.சைக்கிள்; உயிர்தப்பித்தனர் இருவர்!

மன்னார், மார்ச் 10

மன்னார் - திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரியை அனுஷ்டிப்பதற்காக திருக்கேதீஸ்வரம் நோக்கி இரு இளைஞர்கள் பயணித்த மோட்டார்சைக்கிள் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது.

யாழ். - மன்னார் பிரதான வீதி பள்ளமடு பகுதியில் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவரும் நிலைமையை உணர்ந்து மோட்டார்சைக்கிளில் இருந்து பாய்ந்து தப்பித்தனர்.

எனினும், மோட்டார்சைக்கிள் முழுமையாக எரிந்து சேதமடைந்தது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி!

யாழ்பபாணம், மார்ச் 10



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு பாடசாலை அதிபர் கந்தசாமி சிவனேசன் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கணினிப் பொறியியலாளரும் டெக்கொரின் சொலூசன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அரிய குமார் சிறிகரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை ஸ்ரீஇராமச்சந்திரனும், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கிருஷ்ண பிள்ளை பாக்கியநாதனும், முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய ஆசிரியர் வாரித்தம்பி பிரபாகரனும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சரவணமுத்து சிதம்பரநாதனும் கலந்துகொண்டனர்.



வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், வெற்றிக் கோப்பைகளும் விருந்தினர்களால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-இ)






## யாழில் காற்றுமாசு உயர்வு

கொழும்பு, மார்ச் 10

கொழும்பு நகரின் காற்று மாசுபாடு நிலைமை மோசமாகிக் காணப்படுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இதற்கு அடுத்ததாக யாழ்ப்பாணம் மற்றும் கண்டி மாவட்டங்களில் காற்று மாசு உயர்வாகக் காணப்படுகிறது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் பரப்புரையில் ரணில்

ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரையின் முதலாவது பொதுக்கூட்டம் இன்று குளியாபிட்டிய மாநகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் ரணில் பங்கேற்கும் முதலாவது பொதுக் கூட்டம் இதுவென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்தப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கோத்தா பரிந்துரை ரஷ்யா கேள்வி?

எந்தெந்த நாடுகளின் இராஜதந்திரப் பிரதிநிதி கள் இலங்கைக்கு வருவதைக்கட்டுப்படுத்தவேண்டும் என்பதை கோத்தாபய ராஜபக்ச தெளிவுபடுத்த வேண்டும் - இவ்வாறு ரஷ்யத் தூதுரகம் தனது ருவிற்றர் பதிவில் கேள்வியெழுப்பியுள்ளது. "வெளிநாட்டுத் தூதுவர்கள் இலங்கைக்கு இராணுவ நோக்கங்களுக்காக வருகை தருவதை கட்டுப்படுத்தப் படவேண்டும் என்று கோத்தாபய ராஜபக்ச அண்மையில் வெளியிட்ட புத்தகத்தில் பரிந்துரைத்துள்ளார். எந்தெந்த நாடுகளின் இராஜதந்திர பிரதிநிதிகள் என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்?" - என்று அந்தப் பதிவில் உள்ளது. (ச-இ)

## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்்பு 13 . 07 . 1962



இறப்பு 02 . 03 . 2006

**சுப்பிரமணியம் இராஜேந்திரன்**

(வலி மேற்கு பிரதேசசபை ஊழியர்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பதினெட்டு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

உன் பிரிவால் வாடும்
மனைவி,
மருமகன் - தெய்வேந்திரம் வினோத்.

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

(CS/54291) J-1

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண் மகிழ 12 . 07 . 1936



கண் நெகிழ 09 . 02 . 2024

அமரர்

**செல்வி ஞானேஸ்வரி கணபதிப்பிள்ளை**

(ஓய்வு பெற்ற தாதி - Green Memorial Hospital Manipay)

பண்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமான எங்கள் பெரியம்மா
படுத்த படுக்கையாய் உங்களைப் பார்க்கும் வேளையிலே
படைத்த கடவுளுக்கும் மனம் இரங்கலையோ
உடம்பு ரணமாகிய நேரத்திலும் மீண்டு எழுந்து
வருவீர்கள் என காத்திருந்தோம்.
நொடிப்பொழுதில் காலனவன் கவர்ந்திடவோ
உங்களோடு உறவாடிய உறவுகள் நொந்தழ
நீங்காத துயர்தனை அள்ளித் தந்து
தைதத்திங்கள் அமாவாசை திதி நாளில்
தரணி விட்டுச் சென்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

6ம் வட்டாரம்,
மண்டை தீவு.

நீங்காத நினைவில் துயருறும்
குடும்பத்தினர்

## ஈரவிழிகளுடன் ஐந்தாண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில் 23.04.1940

வேரக்கேணியான் அடியில் 06.03.2019

அமரர்

**பேரம்பலம் நடேசபிள்ளை**

திதி: மாசி அமாவாசை - (10.03.2024)

நாட்களும், வாரங்களும், மாதங்களும் தான் அவை
கடந்திட வருடங்களோ ஐந்தாகிவிட்டதே!
ஆனாலும் உம் பிரிவின் துயரமும் உம் நினைவுகளும்
என்றும் எம் மனம் விட்டு நீங்கிடாது அப்பா..

மனிதப்பிறப்பின் மகத்துவம் நிறைத்து
என்றும் அளவில்லா அன்பை பொழிந்து
பக்குவமாய் பேசி தவறுகள் களைந்து
அன்புச்சொல்லில் அனுபவம் உரைத்து

மண்ணின் பெருமையை மனதிற்பதித்து
வாஞ்சையுடன் இறைதொண்டை பணிவுடன் செய்து
மனதார சொந்தங்களை மகிழ்வுடன் நேசித்து
மற்றவர்க்குதவும் நற்குணத்தைக் கொண்டு

அன்பினால், பண்பினால், நட்பினால்,
ஆளுமையினால் எம் அனைவரினதும்
உள்ளங்களில் வாழும் உங்களை - நாம்
எங்ஙனம் மறப்போம் அப்பா..

நீண்டு செல்லும் நாட்கள் அனைத்தும் எம் நெஞ்சினில்
உமை நிறுத்தி நித்தமும் நினைத்திடுவோம் நாம்..
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"நாகபவனம்"
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

(CS/24036) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 12 . 1957



மறைவு 08 . 03 . 2024

**இராசலச்சுமி சிவனேஸ்வரன்**

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும், மடத்தடி கிழக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலச்சுமி சிவனேஸ்வரன் நேற்று முன்தினம் (08.03.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், சிவனேஸ்வரனின் அன்பு மனைவியும், லக்ஷனா, சாரங்கா (வவா - சுவீடன்), கஜிந்தன் (சுவிஸ்), தனுஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்தூரன், கபிலரங்கன் (சுவீடன்), கௌசல்யா (திவ்யா - சுவிஸ்), கீர்த்திகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்மிதா, மீரஜா, வர்சிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற அன்னலச்சுமி மற்றும் சற்குணலச்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவதாசன் (ஜேர்மனி), சிவறஞ்சினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மகன் - 041 7938 34769
மருமகன் - 077 464 5870

(CR/42084) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# அல்லலுறும் ஆதிசிவன்!

வெடுக்குநாறிமலையில் சிவவழிபாடுகள் இடம் பெறக்கூடாது என்பதில் தீர்க்கமாக நின்று, ஆதி லிங்கேஸ்வரரை வழிபடவந்த பக்தர்களை எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு வதைத்து அக்கிரமங்கள் புரிந்து அனுப்பிவைத்திருக்கின்றது ஸ்ரீலங்கா அரசின் பொலிஸ் படை . வெடுக்குநாறிமலையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற காட்சிகள் எல்லாம், குறைந்தபட்ச ஜனநாயக அம்சங்கள் கொண்ட எந்தவொரு நாட்டிலும் காணக்கிடைக்காத துர்ச்சம்பவங்கள் -கொடுமைகள் - வன்செயல்கள் மற்றும் ஜனநாயகப் படுகொலைகள்.

நவீன உலகில் 'போர்களின் பூமி' என்று அறியப் படுவது பலஸ்தீனம். பள்ளிக்குழந்தைகள் பேனா பிடிப்பதற்குப் பதிலாக, கவண்களில் கற்களை வைத்து வீசுவதற்குத்தான் அங்கு பழக்கப்படுகின்றனர். கோலியாத்தை எதிர்த்த தாவீதாக இஸ்ரேல் இராணுவத்தின் அடக்குமுறைகளையும் அதன் யூத சித்தாந்தச் சிந்தனைகளையும் அவர்கள் எதிர்த்து நிற்கின்றனர். 1940 களில் பரந்து விரிந்திருந்த பலஸ்தீனம் இன்று குறுகிக் குறுகி அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த அடக்குமுறைகளும், ஆக்கிரமிப்பு மனோநிலைகளும்,வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவதும், மனித உரிமைகளைத் துச்சமெனக் கருதிய கைதுகளும்தான் 'போர் மலிந்த பூமியாக' இன்று பலஸ்தீனத்தை மாற்றியிருக்கின்றது. இனியும் பொறுத்துவிடமுடியாது என்ற கட்டத்தில், பலஸ்தீனர்களும், அவர்களின் ஆதரவு பெற்ற ஹமாஸ் போராளிகளும் மிகமோசமான வகையில் இப்போதெல்லாம் எதிர்வினையாற்றுகின்றனர். மத்திய கிழக்கில் பலஸ்தீனம் எவ்வாறோ அவ்வாறுதான் ஆசியாவில் இலங்கை.

தமிழர் தாயகத்தில் தொல்லியல் பகுதிகளாக இன்று அடையாளப்படுத்தப்பட்டவற்றில் 90 சத வீதத்துக்கும் அதிகமானவை தமிழர்களின் பாரம்பரிய நிலப்பகுதிகள். ஆனால், இந்தப் பாரம்பரியத்தை - தொல்லியலை - தொன்மைமிகு வரலாற்றை திரித்து, அழித்து, புனைந்து அதைச்சிங்கள-பௌத்தத்துக்குரியதாக மாற்றிவிடவேண்டும் என்பதில் 'பௌத்த பேரினவாதம்' காலம்காலமாகவே தீவிரம் கொண்டிருக்கின்றது. கடந்த வருடம் மார்ச் மாதத்தில் வெடுக்குநாறிமலையில் இருந்த சிவலிங்கமும் இதர தெய்வங்களின் உருவச்சிலைகளும் அடியோடு பெயர்த்தெடுக்கப்பட்டு உடைத்துச் சிதிலப்படுத்தப்பட்டமையும், நேற்றுமுன்தினம் சிவராத்திரி வழிபாடுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மிருகத்தன நடவடிக்கைகளும் அதையே தான் கட்டியம் செய்கின்றன.

இலங்கையும் இனவாதமும் இரண்டறக் கலந்தவை. அவை எக்காலமும் ஒன்றிலிருந்து இன்னொன்று பிரிக்கப்பட முடியாதவை என்ற செய்தியைத்தான் 'பொருளாதாரப் பேரிடரின் பின்னரான' இந்த அதியுச்ச மதத் தாண்டவம் பட்டவர்த்தனமாக்குகின்றது. தேர்தல் காலத்தில் இவ்வாறான மத அக்கிரமங்கள் சிங்கள-பௌத்த பேரினவாத அரசுக்கு அவசியமாகின்றன. கொஞ்சம் கொஞ்சமாக தன் இயல்பான அமைதி நிலையை தமிழர்தாயகம் இழக்கவேண்டும் என்பதுதான் பேரினவாதப் பூதத்தின் பெருவிருப்பு. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சமநேரத்தில், இவ்வாறானதொரு அக்கிரமம் நிகழ்கின்றதென்றால் இதன் பின்னாலுள்ள அசாத்தியத் துணிவை இந்த அரச படைகளுக்குக் கொடுத்தது யார்? என்ற கேள்வி இங்கெழுவதும் தவிர்க்கப்பட முடியாததாகின்றது. பலஸ்தீனத்துக்காகக் குரல்கொடுக்கும் உலகின் மிகச்சொற்பமான நாடுகளில் இலங்கையும் ஒன்று. இதற்காக இலங்கைத் தலைவர்களுக்கு பலஸ்தீனம் விருதுகள்கூட வழங்கியிருக்கின்றது. ஆக, பலஸ்தீனத்தில் யூதர்களின் ஆக்கிரமிப்பை, அத்துமீறலைப் புரிந்து தெளிந்து அதற்காகக் குரல்கொடுக்கும் சிறிலங்கா, தான் என்ன மனோநிலையில் தமிழர்கள் விவகாரத்தையும் தமிழர்களுக்குரிய தொன்மைத் தேசங்களையும் கையாள்கின்றது என்பது புரியாமல் இருப்பதெல்லாம் ஆச்சரியத்தின் உச்சம்தான்.




# பெண்களுக்கு வலுவூட்டல் விரைவில் இரு சட்டங்கள்!



கொழும்பு, மார்ச் 10

**நாட்டில் பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகிய இரண்டு சட்ட வரைவுகள் எதிர்வரும் மே மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

'அவளுக்கான பலம் - அவளுக்கான முன்னேற்றம்' என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளிர்தின நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எமது நாட்டில் விழாக்களை நடத்தி பெண்களின் உரிமைகள் பற்றிப் பேசிவிட்டு வீடு திரும்புவதுதான் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது.

ஆனால், இந்த முறை அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பது என்பது வெறும் பேச்சில் மட்டும் நின்றுவிடக்கூடாது. ஆசியாவிலேயே முதன்முறையாக எமது நாட்டில் பாலின அடிப்படையிலான வரவு - செலவுத் திட்டம் விரைவில் அறிமுகப் படுத்தப்படும். பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுப்பதற்குச் சட்டம் கொண்டு வரப்படவேண்டும்.

அந்தவகையில் பெண்கள் வலுவூட்டல் சட்டவரைவு நேற்றுமுன்தினம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. பாலின சமத்துவ சட்டவரைவும் எதிர்வரும் வாரத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படும் - என்றார். (ச-இ)

## பதவி விலகியது பணிப்பாளர்சபை

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர்சபை பதவி விலகியுள்ளது.

சாந்த நிரியல்ல உட்பட 15 பேர் கொண்ட பணிப்பாளர்சபை பதவி விலகியுள்ளது என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். அமைச்சரின் அறிவித்தலுக்குஅமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## பொலிஸ்மா அதிபர் பதவி காலவரையறைக்குச் சட்டம்

பொலிஸ்மா அதிபர் பதவிக் காலத்தை நிர்ணயிக்கும் புதிய சட்டமொன்றைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பதவியை வகிப்பவர்கள் குறிப்பிட்ட காலவரையறை மட்டும் அந்தப் பதவியில் நீடிப்பதை உறுதி செய்யும் வகையில் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கணக்காய்வு சேவை வெற்றிட ஆட்சேர்ப்பு

கணக்காய்வு சேவையில் 40 வீத வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதனால், சில விசேட கணக்காய்வு நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என கணக்காய்வாளர் நாயகம் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)

## சுகாதார முறைகேடு 3 கடைகளுக்குப் பூட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 10

சண்டிலிப்பாய்ப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிவந்த சுமார் 20 க்கும் மேற்பட்ட கடைகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த வாரம் இந்தப் பகுதிகளில் திடீர் சோதனைகளை முன்னெடுத்தனர். இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய சுமார் 20 கடைகளுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றம் குறித்த கடை உரிமையாளர்களுக்கு மூன்று இலட்சம் ரூபா தண்டப் பணம் விதித்ததோடு மிகவும் மோசமாக இயங்கிய உணவகங்கள் உட்பட 3 கடைகளை மூடுமாறும் உத்தரவிட்டது. (ச-555)

## நாளை

11.03.2024

திங்கட்கிழமை

மாசி–28

சுபநேரம் : 12:22 -01.52

ராகுகாலம் : 07.52 - 09.22

## நாளொரு நல்வார்த்தை

ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன்.
ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள்;
அவனே எனது வழிகாட்டி!

– ஜூலியஸ் சீசர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூளாய், வேரம் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் சிவராத்திரி தின நிகழ்வு கழகத் தலைவர் ப.சசிதரன் தலைமையில் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கடந்த வருடம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்ற மாணவர்களை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கௌரவித்தார்.

நிகழ்வில், சமூகச் செயற்பாட்டாளர் ச.தனேந்திரன், ஐக்கிய இளைஞர் சனசமூக நிலையத் தலைவர் சுபாஸ்கரன், மூளாய் அக்கினி வைரவர் தேவஸ்தான செயலாளர் வீ. யாகேஸ்வரன், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (எ-125)

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத் திருநெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் வினா - விடைப் போட்டிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றன. போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (எ-159)





மீசாலை சுடர்ஒளி முன்பள்ளிச் சிறார்களின் மாதிரிச் சந்தை நிகழ்வு முன்பள்ளி வளாகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-9)



முழங்காவில், கரியாலை நாகபடுவான் பகுதியில் மிளகாய் அறுவடை விழா முழங்காவில் விவசாயப் போதனாசிரியர் ம.மகிலன் தலைமையில் கடந்த புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரியும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. புவிதனும், மறு வயல் பயிர் மற்றும் உற்பத்தியாளர் அமைப்பின் தலைவர் சி.சிறிரங்கநாதனும் கலந்து கொண்டனர். (எ-13)



ஒட்டுசுட்டான் இந்துபுரம் கிராம மக்களால் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தின்போது கிராமத்தில் உள்ள பொது இடங்கள் கடந்த வியாழக்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டன. (எ-13)



குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேக, பூசை வழிபாடுகள் மற்றும் கூட்டுப் பிரார்த்தனை வழிபாடு என்பன நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ப-66)





பாதுகாப்புப் பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச உள்ளிட்ட பாதுகாப்பு உயர் மட்டக் குழுவினர் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்தனர். இலங்கை விமானப்படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கண்காட்சி நிகழ்வுகளில் பங்கேற்றனர். (எ-20,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிவராத்திரி வழிபாட்டுக்குத் தடை செல்வம் எம்.பி. கண்டனம்

மன்னார், மார்ச் 10

வவுனியா, வெடுக்குநாறிமலையில் நேற்று (நேற்றுமுன்தினம்) இடம்பெற்ற சிவராத்திரி பூசை வழிபாடுகளின்போது பக்தர்களின் சமய வழிபாடுகளுக்குப் பொலிஸார் இடையூறு விளைவித்து, அங்கிருந்த சமயச் செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்மீது வன்முறையைப் பிரயோகித்துள்ளனர். இது மிகவும் கண்டனத்துக்குரியது என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன, மத, நல்லிணக்கத்துக்குப்பாதகமாக அமையும். பொலிஸார் பொதுமக்களிடம் அத்துமீறும் செயற்பாட்டை நிறுத்தவேண்டும். தமிழ் மக்கள் அவர்களுக்குச் சொந்தமான பூமியில் பாரம்பரிய சமயக் கடமைகளைச் செய்வதற்கு இடையூறு விளைவித்தமை கடும் கண்டனத்துக்குரியது. தமிழ் மக்களுக்கு எதிராக பொலிஸார் செயற்படுவதை நிறுத்தவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-

# 600 பேருக்கு சர்வதேச பிடியாணை

வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ள பாதாள உலகச் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் கடத்தலில் சம்பந்தப்பட்ட குழுக்களைச்சேர்ந்த 600 பேருக்கு எதிராக சர்வதேசப் பொலிஸார் ஊடாக சிவப்பு அறிக்கை பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை இலங்கைக்குக் கொண்டு வருவது தொடர்பில் ராஜதந்திர மற்றும் தூதரக மட்டத்தில் ஏற்கனவே பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளதுடன் அவை வெற்றிகரமான மட்டத்தில் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகளுடன் தொடர்புள்ள குற்றவாளிகள் எவரும் வேறு நாடுகளுக்குத் தப்பிச் செல்லமுடியாதபடி நாட்டுக்குள் பாதுகாப்பைப் பலப்படுத்துவது தொடர்பாகவும் அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர். குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் இலகுவாக டுபாய் மற்றும் இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதால், அதைத் தடுப்பது தொடர்பாக அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர். ராஜதந்திர மட்டத்தில் நடத்தப்படும் பேச்சுகள் வெற்றியளித்தால், அதன் பின்னர் இலங்கையில் குற்றச் செயல்களில் ஈடுபட்டுவிமான நிலையங்கள் ஊடாக எவரும் தப்பிச்செல்லமுடியாத நிலைமை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வீதியின் குறுக்கே திடீரென நாய் ஓடியதால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரொருவர் விபத்துக்குள்ளாகி காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்திக்கு அருகில் நேற்று இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இளைஞர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-17)

# மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 முல்லைத்தீவு - வட மாகாணம்

மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 (MILO Football Champs) - வட மாகாணம் (10 மற்றும் 12 வயதிற்கு கீழ்ப்பட்ட அணிகள்) போட்டியின் இரண்டாவது ஆட்டம் 2024 மார்ச் 2 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றது. மொத்தமாக 32 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றியதுடன், அதில் 14 பெண்கள் அணிகளும், 18 ஆண்கள் அணிகளும் அடங்கியிருந்தன.

இந்த வார இறுதியில் இடம்பெற்ற போட்டிகள் மூலமாக முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பின்வரும் அணிகள் வெற்றியாளர்களாக வலம்வந்தன:

- முல்லைத்தீவு/உடையார்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (10 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு)
- முல்லைத்தீவு/இரணைப்பாலை ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் (10 வயதிற்குட்ட ஆண்கள் பிரிவு)
- முல்லைத்தீவு/முல்லைத்தீவு ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை (12 வயதிற்குபட்ட பெண்கள்)
- முல்லைத்தீவு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம் (12 வயதிற்குபட்ட ஆண்கள் பிரிவு)

இந்த வார இறுதிப் போட்டிகளிலிருந்து 2024 மார்ச் 23 அன்று யாழ்ப்பாணம் துரையப்பா அரங்கில் இடம்பெறவுள்ள, மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற இறுதிச் சுற்றில் போட்டியிடுவதற்கு பின்வரும் பாடசாலைகள் தகைமை பெற்றுள்ளன.

**10 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு**

- முல்லைத்தீவு / உடையார்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- முல்லைத்தீவு / அலம்பில் ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு / முத்தையன்கட்டு (இடதுகரை) அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- முல்லைத்தீவு / குரவில் தமிழ் வித்தியாலயம்

**10 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவு**

- முல்லைத்தீவு / இரணைப்பாலை ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு / அலம்பில் ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு / குரவில் தமிழ் வித்தியாலயம்
- முல்லைத்தீவு / சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்

**12 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு**

- முல்லைத்தீவு / முல்லைத்தீவு ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை
- முல்லைத்தீவு / அலம்பில் ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு / அலம்பில் ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு / குமிழமுனை மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு / உடையார்கட்டு மகா வித்தியாலயம்

**12 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவு**

- முல்லைத்தீவு / முல்லைத்தீவு மகா வித்தியாலயம்
- முல்லைத்தீவு / சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்
- முல்லைத்தீவு / கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயம்
- முல்லைத்தீவு / குரவில் தமிழ் வித்தியாலயம்

எதிர்கால உதைப்பந்தாட்ட நட்சத்திரங்களாக மாறும் திறமைகளைக் கொண்டவர்களுக்கு களம் அமைத்து, வட மாகாணத்தில் அபிலாஷைமிக்க விளையாட்டு வீரர்களின் விளையாட்டுத் திறன்களை தூண்டுவதே மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் நிகழ்வின் நோக்கமாகும். இச்சுற்றுப்போட்டியுடன் இணைந்ததாக, திறமைமிக்க வீரர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு குழு, இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கத்தின் அனுபவம்மிக்க பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டலில் எதிர்வரும் மாதங்களில் வாரஇறுதியில் விசேட பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். கல்வி அமைச்சு, வட மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் ஆதரவுடனும், நெஸ்லே மைலோவின் அனுசரணையுடனும் இந்நிகழ்விற்கான ஏற்பாட்டை இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கம் நிர்வகிக்கும்.

இலங்கையில் அடிமட்ட விளையாட்டுக்களை வளர்ப்பதிலும், விளையாட்டில் பாலின பன்மைத்துவத்தை முன்னின்று வழிநடத்திச் செல்லவும் நெஸ்லே மைலோவின் பயணத்தில், இலங்கையில் எதிர்காலத் தலைமுறைகளை வளப்படுத்தும் நோக்குடன் இந்நிகழ்வுக்கு அனுசரணையளிக்கின்றது.



# இலங்கையில் முதன்முறையாக மின்சார முச்சக்கர வண்டிகள்

கொழும்பு, மார்ச் 10

இலங்கையில் முதன்முறையாக மின்சார முச்சக்கரவண்டிகளை உற்பத்தி செய்யும் முழுமையான தொழிற்சாலை திறக்கப்படவுள்ளது. மருதானை புகையிரதத் திணைக்கள களஞ்சியசாலை வளாகத்திலேயே இந்தத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.

வேகா பொறியியல் நிறுவனத்தால் மருதானை புகையிரத களஞ்சியசாலை வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்ட மின்சார முச்சக்கரவண்டிகள் உற்பத்தி மற்றும் முச்சக்கரவண்டிகளை மின்சாரமாக மாற்றும் தொழிற்சாலை வளாகம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் திறக்கப்பட்டுள்ளது. இலங்கையிலேயே முழுமையாக உற்பத்தி செய்யப்படும் மின்சார முச்சக்கர வண்டியின் முழு உற்பத்திச் செயல்முறையும் இந்த உற்பத்திதொழிற்சாலை வளாகத்திலேயே மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# 22 இந்தியப் பிரஜைகள் இலங்கையில் கைது

கொழும்பு, மார்ச் 10

நாகஹமுல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தங்கியிருந்து சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 22 இந்தியப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள இந்தியத்தூதரகத்தின் தகவலுக்கமைய சந்தேகநபர்களுடன்35 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 5 மடிக்கணினிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் சுற்றுலா விசாவில் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என்றும் மேலதிக விசாரணைகளுக்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிதாகத் திறக்கப்படும் கிளினிக்கிற்கு ஆட்கள் தேவை**

- முழுநேர வைத்தியர்
- பகுதிநேர வைத்தியர்
- விசேட வைத்திய நிபுணர்கள் (Visiting)
- மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தர் (MLT)
- தாதியர்
- வரவேற்பாளர்
- சுத்திகரிப்பாளர்

whats app: **070 139 6455** யாழ் நகர்

(CS/54312) J-1

**வாடகைக்கு**

யாழ். கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள **வீடொன்று வாடகைக்குக் கொடுக்கப்படும்**. அல்லது தனி **அறைகளாக வாடகைக்குக்** கொடுக்கப்படும். **சைவ போசனம்** விரும்பத்தக்கது.

தொடர்பு:- **077 075 7595**

(CS54306) J-1

**சர்வதேச புலவர் திருமண சேவை**

**பெற்றோர், பிள்ளைகளின் விருப்பங்களை அறிந்து,**
அதற்கு ஏற்ப **74** வருடங்களாக செயல்படும்
**சர்வதேச புலவர் திருமண சேவை.**
இடம்: **238, அரசடி வீதி**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(cs.54305)

**077 075 7595, 021 222 7147**

**நினைவழியா ஐந்தாம் ஆண்டு**

எங்களிடம் 12 . 04 . 1938

இறைவனிடம் 06 . 03 . 2019



அமரர் வைத்திய கலாநிதி
**நடராஜா சிவராஜா**
திதி: அமரபக்க அமாவாசை

சொல்லாலும் செயலாலும் பிறருக்காக
நீங்கள் செய்த நல்ல செயல்களால்
அனைவரது மனங்களிலும் என்றும்
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்
உங்கள் ஆன்மா இறைவனடியில்
சாந்தி பெற பிரார்த்திக்கிறோம்

47/3 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலைஅரசி சிவராஜா
மற்றும் குடும்பத்தினர்

(CS/54295) J-1

சபாநாயகருக்கு எதிரான

# பிரேரணை மீது 19 இல் விவாதம்?

கொழும்பு, மார்ச் 10

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைமீதான விவாதம் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பிரேரணைமீது இருநாள்கள் விவாதம் நடத்தப்பட்டு 20ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

மார்ச் மாதத்துக்குரிய 2ஆவது வார நாடாளுமன்ற அமர்வு 19ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அவ்வாரத்துக்குரிய நிகழ்ச்சிநிரல் தொடர்பில் ஆராய சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு அடுத்தவாரம் கூடும்.

இதன்போது மேற்படி திகதிகள் உறுதிப்படுத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

(ஒ-44)

# திரைப்படமாகும் கோத்தாவின் புத்தகம்!

கோத்தாபய ராஜபக்ச எழுதி வெளியிட்ட 'என்னை ஜனாதிபதிப் பதவியிலிருந்து வெளியேற்றிய சதி' என்ற புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கத் தீர்மானித்துள்ளதாக கோத்தாபய ராஜபக்சவின் ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இந்தத்திரைப்படத்தை 'நெட்ஃபிக்ஸ்' இல் வெளியிடதிட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான திரைக்கதை ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

**வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் வ-து**

**மேசன் வேலை, கூரைவேலை, மாபிள் வேலை, வர்ணப்பூச்சு** ஆகிய அனைத்து வேலைகளையும் செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூலி கூறுவிலை கோரப்படுகின்றது.

ஒப்பந்தகாரர்கள் விண்ணப்படிவத்தையும் மேலதிக தகவல்களையும் தினமும் **மு.ப.8.00 - பி.ப. 2.00** மணிவரை சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : **24.03.2024** முற்பகல் **10.00** மணிக்கு முன்
தொடர்பு இலக்கம் : **076 711 1168**

**தலைவர்,**
வலிகிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)
பருத்தித்துறை வீதி, நீர்வேலிச் சந்தி, நீர்வேலி.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகரான
திரு **மகாலிங்கம் விவேகானந்தன்**



அவர்கள்
அகில இலங்கை சமாதான
நீதிவானாகப் பதவி
ஏற்றுள்ளமையைப்
பாராட்டி வாழ்த்துவதோடு,
அவரின் பொதுச்
சேவைகள் மேன்மேலும்
வளர பழநி முருகன்
துணைபுரியப்
பிரார்த்திக்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்கள்:
ஸ்ரீ பழநி.சி.க.கூ.சங்க அங்கத்தவர்கள்
டச்சு வீதி, சாவகச்சேரி.

(CS/24031) J-1

**விற்பனைக்கு**

**Komatsu PC 30**
**எக்ஸ்கவேடர் இயந்திரத்திற்கான Track Rollers,**



**Track Group, Idlers, Sprockets, Tooth, Pin மற்றும் Adaptors விற்பனைக்கு.**
**இன்றே அழையுங்கள் 076 310 7534**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

**மரண அறிவித்தல்**

தோற்றம் 07 . 06 . 1957

மறைவு 06 . 03 . 2024



**வடிவேலு மணிவேலழகன்**

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு மணிவேலழகன் கடந்த (06.03.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - மணியம்மா தம்பதிய ரின் அன்புமகனும், காலஞ்சென்ற கதிரேசு மற்றும் நவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், லோமாவதி அவர்களின் பாசமிகு கணவரும், மகிழரசி, நிஷாந்தினி, காலஞ்சென்ற நாகவிபூஷன் மற்றும் பத்மவிதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி ஒழுங்கை,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**076 062 8748**
**076 176 8848**

(CS54309) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## எரிபொருள் நிரப்பு நிலைய நிலக்கீழ்
## தாங்கிக்கான தொட்டி அமைத்தலுக்கு கேள்வி கோரல்

எமது சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு நிலக்கீழ் தாங்கிக்கான தொட்டி அமைத்தலுக்கு கேள்வி கோரல்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது. இது தொடர்பான விபரங்களை சங்க அலுவலக நேரத்தில் பெற்று பார்வையிடலாம். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1000.00 செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி கோரல்களை **28.03.2024** இற்கு முன்னதாக **"பொது முகாமையாளர் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்"** என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** அலுவலக நேரம் (காலை 8.30 - மலை 5.00 மணிவரை)
தொலைபேசி இலக்கம்: **021 221 1522**

**பொது முகாமையாளர்,**
**வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வேலணை.**

(CS43086) (J-1)

# முதியோர், நோயாளர் பராமரிப்புச் சேவை

Jaffna Doctor
**For Your Loved Ones**

- பராமரிப்பாளர் சேவை
- தாதியர் சேவை
- மருத்துவ பரிசோதனை
- குருதிப் பரிசோதனை
- அம்புலன்ஸ் சேவை
- சலக் குழாய் மாற்றுதல்
- சத்திர சிகிச்சையின் பின் பராமரிப்பு
- நீண்ட கால புண்களுக்கான பராமரிப்பு

முதியோர்களுக்கான நீண்ட கால, குறுகிய கால தங்குமிட சேவைகள், உள வள ஆலோசனை சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **0701348384**

## விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் 4 பரப்புக் காணியும் 2 பரப்புக் காணியும் 1 3/4 பரப்புக் காணியும், யாழ் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் செட்டி ஸ்ரீட் லேனில் 01 பரப்பும் 15 குழியும் சுற்றி வர மதிலுடன் கூடிய 5ம் இல காணியும், யாழ் K.K.S வீதியில் பிரப்பங்குளம் லேனில் 43ம் இல காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **077 723 2535**

## காணி விற்பனைக்கு

மூளாயிலுள்ள ஐயனார் கோயில் அருகாமையில் உள்ள 12 பரப்புடைய காணி விற்பனைக்குண்டு.

**077 711 6134**

## அலுவலக உதவியாளர் தேவை

யாழ் வணிகர் கழகத்திற்கு
அலுவலக உதவியாளர் **(Peon)**
ஆண் வேலையாள் தேவை.

(CS-54310) (N-1)

தொடர்பு: யாழ்.வணிகர் கழகம்
இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
jaffnachamberofcommerce@gmail.com
076 575 4993, 077 723 8629, 021 222 2367

## வீடு, கடைகள் வாடகைக்கு

யாழ். நகரில் வீடு, கடைகள், களஞ்சியசாலைகள், படிக்கும் மாணவர்களுக்கான அறைகள், நாளாந்த வாராந்த நவீன அறைகள் மற்றும் வீடுகள் எம்மிடம் உண்டு.

(CS/28152) J-1

**077 345 0039, 077 348 0039**

## பணியாளர்கள் தேவை

கொழும்பில் உள்ள உணவகம்
ஒன்றிற்கு யாழ்ப்பாண பாரம்பரிய
முறைப்படி சைவ/அசைவ உணவு
தயாரிக்கக்கூடிய 40-55 வயதிற்கு
உட்பட்ட ஆண்/பெண்
சமையலாளர்கள் தேவை.
(உணவு, தங்குமிடம் இலவசம்)

(CS 24037 A) S-1

தொடர்பு: **070 445 4656**

## வாடகைத்தாய் தேவை

நல்ல ஆரோக்கியமான
வாடகைத்தாய் தேவை.
தங்களின் விபரம்
இரகசியமாக வைக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு

(CS 54189) J-1


தொடர்பு: **074 004 7586**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பொன்னுத்துரை சிறீகரன்

**தோற்றம்**
**08.09.1955**

**மறைவு**
**02.03.2022**



கலங்கரை விளக்கமது
கல்லறை நுழைந்து
வருடங்கள் இரண்டாகின்றன.

கனிவான பேச்சும் மிதமான
நினைவுகளும் உள்ளத்திரையில்
ஓடிக்கொண்டே இருக்கின்றன

காத்திருப்புகள் சில கைகூடும்
தருணமதில் வெற்றிடமாகவே
உள்ளது உங்கள் இருப்பு.

ஆசீர்வாதங்களிலும் வழிகாட்டல்களிலும்
என்றென்றும் எம்முடன்
பயணித்துக்கொண்டே இருப்பீர்கள்

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!**

"விஜயாபதி"
கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய்.

(Cs 54308) (N-1)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சோதிநாதன்

**(முன்னாள் சோதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**



**பிறப்பு** **26.05.1935**
**இறப்பு** **02.03.2024**

யாழ்ப்பாணம் கச்சேரியடியைப் பிறப்பிட மாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சோதிநாதன் 02.03.2024 சனிக்கிழமை இறை பதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கண பதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பூவாலி - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்க ளான கதிரவேலு, மகாராஜா, அமிர்த லிங்கம், தம்பிப்பிள்ளை மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற சந்தானலட்சுமி ஆகியோ ரின் அன்புச் சகோதரனும், சபாநாதன், இரங்கநாதன், ரகுநாதன், செல்வநாதன், விமலநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பஜோதி, விக்னேஸ்வரி, சுகந்தி, உதயகுமாரி, பிரதீபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சகானா, தனுஜன், துவாரகா, லக்ஷிகா, பரணிதா, தனுசியா, விதுஷன், கயூர்ணன், டிஷானி, தீபிகா ஆகியோரின் அன்பு மிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2024) ஞாயிற்றுக்கிழமை Canada, Ontario இல் மலர்ச்சாலையில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு இலங்கை நேரப்படி பிற்பகல் 9.30 இற்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகள் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**செல்வநாதன் - 077 077 4090 , ரகுநாதன் - +44 7941 234969**
**ரங்கநாதன் - +122 63435100 , சபாநாதன் - +33 622019655**
**விமலநாதன் - 074 0761974**

(CS/54316) J-1

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**17 . 06 . 1954**



**மறைவு**
**08 . 03 . 2024**

## ஈஸ்வரலிங்கம் விக்கினேஸ்வரி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிட மாகவும் கொண்ட ஈஸ்வரலிங்கம் விக்கினேஸ்வரி நேற்று முன்தினம் (08.03.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஈஸ்வரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காயத்திரி, தேவ மனோகரி, பிரியா, செந்தூரன் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகநந்தன், சிவகுமார் (சிவம் களஞ்சியம் - சுழிபுரம்), டட்சுதன், கீதா (மலேசியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸாயித்தியா, இளங்குமரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.03.2024 முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

**விளையாட்டரங்கு வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**

(CS/54313) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BUILD
YOUR FUTURE
READY SKILLS

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL



புதிய மாணவர் அனுமதி - 2024 பெப்ரவரி நுழைவு

UNDERGRADUATE DEGREE PROGRAMMES
COMPUTING | BUSINESS

SLIIT NORTHERN UNI யின் நான்கு வருட பட்டப்படிப்புகள்.
கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.
தற்போது யாழ்ப்பாணத்தில்,

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Data Science

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

நினைவில் கொள்ள வேண்டிய திகதி

விண்ணப்ப முடிவுத்திகதி
14 MARCH 2024

தகுதிகாண் பரீட்சை
16 MARCH 2024
(10:00AM TO 11:00AM)

மொழி மூலம்
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

NORTHERN UNI
Call us now:
077 147 1471
northernuni.lk
apply@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணி விற்பனைக்கு

இருபாலை கிழக்கில் ஆறு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

T.P 077 649 0650

### வாடகைக்கு வீடு தேவை

இருவர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு யாழ் நகரில் இருந்து ஐந்து km க்குள் ரூபா 5000க்குள் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: 077 628 0685

### தேவை

QUICK BOOKS ல் (ACCOUNTING SOFTWARE) முன் அனுபவம் உள்ளவர்கள் (ஆண்) தேவை.

தொடர்பு: 077 179 2577

### வேலை ஆட்கள் தேவை

Social Media இல் பதிவுகளை இடுவதற்கும் மின்சார பொருட்களை விற்பனை செய்வதற்கும் ஏற்ற ஒருவர் வேலைக்குத் தேவை.

தொடர்பு: 076 760 0403

### PPT வேலை வாய்ப்பு

கிளிநொச்சி முறிகண்டி பகுதியில் அமைந்துள்ள எமது உணவகத்திற்கான காசாளர், சமையல் உதவியாளர் மற்றும் உணவு பரிமாறுவோர் தேவை.

உணவு, தங்குமிடம் இலவசம்.

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 386 6250


# கைதானோரை விடுவிக்கவும்: போராட்டத்துக்கு அழைப்பு

மகாசிவராத்திரியின்போது வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பொலிஸார் மேற்கொண்ட அட்டூழியங்களைக் கண்டித்தும், கைது செய்தோரை உடன் விடுதலை செய்ய வலியுறுத்தியும் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், வெடுக்குநாறிமலை இலிங்கேஸ்வரர் கோவில் மகாசிவராத்திரி பூசையின் போது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் மிகுந்த மனவேதனைக்கு உள்ளாக்கி இருக்கின்றது. சைவர்களின் வழிபாட்டு உரிமை மிகப் புனிதமான விரதநாளில் அப்பட்டமாக மறுக்கப்பட்டு மிக மோசமாக சைவசமய விழுமியங்களை புனித சடங்குகளை அவமதிக்கும் சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன.

அதன் உச்சக்கட்டமாக தவறேதும் செய்யாத சிவனடியார்கள் எண்மர் விரதமிருந்து பூசையில் ஈடுபட்ட தருணம் மோசமாகக் கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பூசை மற்றும் படையல் பொருட்கள் சப்பாத்துக் கால்களால் சீருடை தரித்த நபர்களால் தட்டி அகற்றப்பட்டுள்ளன.

பூசகர் சிவத்திரு மதிமுகராசா மீளக் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த ஈனச் செயல்கள் மிகப் பாரதூரமாக சைவத் தமிழர்களின் மனதைக் காயப்படுத்தியுள்ளன. இது அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயல் என்பதை உலகுக்கும் அரச உயர்பீடத்துக்கும் சொல்ல வேண்டியது ஒவ்வொரு தமிழர்களதும் கடமையாகும்.

சிவராத்திரி தினத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தொன்றுதொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டுவரும் ஆதிசிவன் கோவிலில் நடைபெற்ற மோசமான சம்பங்களைக் கண்டித்தும் கைது செய்யப்பட்ட பக்தர்களை உடனடியாக விடுவிக்கக்கோரியும் நாம் அணிதிரண்டு எதிர்ப்பைப் பதிவு செய்வோம் - என்றுள்ளது. (ஒ-125)


### விற்பனைக்கு

காரைநகர் திக்கரை, களபூமி பகுதியில் 16 1/2 பரப்புடன் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு விலை 60 இலட்சம்

தொடர்புகளுக்கு சிறி: 077 592 1176


### பதவி வெற்றிடம்

க.பொ.சாதாரன தரத்தில் சித்தி பெற்ற, கணினி மற்றும் ஆங்கில அறிவு உள்ள 18 தொடக்கம் 45 வயதிற்கு உட்பட்ட அலுவலகப் பணியாளர் (பெண்) தேவை. மாற்றுத்திறனாளிகள் அல்லது பிள்ளைகள் விரும்பத்தக்கது. நேர்முகப் பரீட்சை (11.03.2024) திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு நடைபெறும்.

இலங்கை பார்வையற்றோர்க்கான அறக்கட்டளை நிலையம்-சங்கமம் வீதி கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தொடர்பு: 070 603 0086


# மரண அறிவித்தல்



தோற்றம் 05.01.1935

மறைவு 09.03.2024

## முருகேசு காசிப்பிள்ளை

**(முன்னாள் வவுனியா பிரபல வர்த்தகரும், கனடா காசிப்பிள்ளை சக புத்திரர்கள் (M. Kasippillai & Sons) உரிமையாளரும்)**

காரைநகர் ஆயிலியை பிறப்பிடமாகவும் வவுனியா, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் வவுனியா பிரபல வர்த்தகரும், கனடா காசிப்பிள்ளை சக புத்திரர்கள் (M. Kasippillai & Sons) உரிமையாளருமாகிய முருகேசு காசிப்பிள்ளை அவர்கள் நேற்று (09.03.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முருகேசு -மாணிக்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற புவனேஸ்வரி அவர்களின் ஆருயிர் கணவரும், கிருஷ்ணகுமாரி, திருக்குமார், ஹரிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.ஆனந்த குமாரசாமி, தயாநிதி, சிவரூபா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கண்மணிராசா, செல்லம்மா, சிவகாமசுந்தரி, சிவபாத சுந்தரம், தங்கம்மா, சிவசம்பு, மனோன்மணி, பொன்னம்மா மற்றும் சின்னத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அஜந்தன், அகல்யா - இந்திரஜித், அனோஜன் - மிலனி, அபீனா - ஜெனுஷன், அருண், அகிலன் ஆகியோரின் அன்புப் பேரனும், வைஷ்ணவி, ஷாலினி ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

பார்வைக்கு: **Saturday, March 16th, 2024, 5:00 - 9:00PM**
**Sunday, March 17th, 2024, 8:00 - 9:30 AM**
**Ajax Crematorium & Visitation Centre**
**384 Finley Ave, Ajax, ON - L1S 2E3**

தகனம்: **Sunday, March 17th, 2024**
**9:30 - 11:00 AM**
**Ajax Crematorium & Visitation Centre**
**384 Finley Ave, Ajax, ON - L1S 2E3**

**தகவல்: குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
திருக்குமார்-மகன் Mobile: +1 647-891-7089
தயாநிதி - மருமகள் Mobile : +1 647-891-7096
கிருஷ்ணகுமாரி – மகள் Mobile: +61 468 691 512
Dr.ஆனந்தகுமாரசாமி - மருமகன் Mobile: +61 421 133 303

(CR 42091) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஓம் நமச்சிவாய' சொல்வது இலங்கையில் குற்றமா?

## வெடுக்குநாறி ஆலய வழக்கு விவகாரத்தில் பாதிக்கப்பட்டோர் சார்பில் சட்டத்தரணி கேள்வி

வவுனியா, மார்ச் 10

'ஓம் நமச்சிவாய' என்று சொல்வது இலங்கைச் சட்டத்திலே குற்றமா என்ற கேள்வியை நீதிமன்றத்திலே நாங்கள் எழுப்பியிருக்கின்றோம் என்று வெடுக்குநாறி மலை ஆலய விவகாரத்தில் கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி க.சுகாஷ் குறிப்பிட்டார்.

மேலும், வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்ட போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆலய நிர்வாகத்தினர் மற்றும் ஊர் மக்கள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பொலிஸாரின் பல்வேறு அடக்குமுறைகளுக்கு மத்தியில் சிவராத்திரி வழிபாடுகள் இடம்பெற்றன. நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்குப் பின்னர் வழிபாட்டில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிஸார் பலப்பிரயோகத்தை மேற்கொண்டு ஆலயத்தின் செயலர், பூசகர் உட்பட 8 பேரைக் கைதுசெய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்று மாலை வவுனியா நீதிவானிடம் முன்னிலைப் படுத்தப்பட்டனர். பொலிஸாரின் விசாரணைகள் இன்னமும் நிறைவடையாத காரணத்தால் அனைவரும் நாளைமறு தினம் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதேவேளை கைதுசெய்யப்படும் போது பொலிஸாரால் தாக்குதலுக்கு இலக்கானதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து 8 பேரையும் சட்டமருத்துவப் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்காக வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

வழக்கில் ஆலயத்தினர் சார்பாக மூத்த சட்டத்தரணி தி.திருஅருள் மற்றும் க.சுகாஸ், திலீப்காந் ஆகியோர் முன்னிலையாகிருந்தனர்.

வழக்கு முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி க.சுகாஸ், இலங்கையினுடைய எந்தச்சட்டத்தையும் மீறாத எட்டு சந்தேகநபர்களான அப்பாவிகள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். பொலிஸாரின் விசாரணைகள் நிறைவடையாத காரணத்தால் வழக்கு திகதியிடப்பட்டுள்ளது.

பொலிஸாரின் அராஜகங்களையும் சந்தேகநபர்களை அவர்கள் தாக்கி காயப்படுத்திய விடயங்களையும் நீதிவானின் கவனத்துக்கு கொண்டுசென்றிருந்தோம். அவர்கள் செய்த ஒரே ஒரு தவறு ஓம் நமச்சிவாய என்று கூறியது மாத்திரமே. அது குற்றமா என்ற கேள்வியையும் எழுப்பியிருந்தோம்.

இந்த வழக்கில் பொலிஸாரின் செயற்பாடுகளும் கைதும்தான் சட்டவிரோதமானதே தவிர அவர்கள் எந்தவிதத்திலும் இலங்கை சட்டத்தை மீறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளோம். கைதுசெய்யப்பட்டபோது ஒரு காரணத்தைச் சொல்லியிருந்தார்கள். வழக்கிலே மற்றொரு காரணத்தைச் சொல்லியிருக்கின்றார்கள் - என்றார். (அ-ஒ-110)

**மணமகள் தேவை**
யாழ். கிறிஸ்தவம் 1982 ல் பிறந்த கொழும்பில் வசிக்கும், வேலை செய்யும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
076 041 0334

**விற்பனைக்கு**
A/C 9000 BHW குளிரூட்டி, றொபின் நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
T.P: 077 236 7848

**மணமகன் தேவை**
யாழ். இந்து (V) 1981 பூராடம் விவாகரத்தான மணமகளுக்கு மணமகன் தேவை. (10 இல் சூரியன், செவ்வாய்)
தொடர்பு:- 077 964 9245

**தேவை**
யாழ்நகரில் வீட்டில் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டுப் பராமரிப்பு வேலை செய்வதற்கு 40 வயதுக்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.
077 298 7506

**விற்பனைக்கு**
கடைத் தளபாடம் விற்பனைக்கு
T.P: 077 465 6325

**கச்சான் விற்பனைக்கு**
தரமான முத்துக்களைக் கொண்ட கச்சான் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: 077 624 4796

சிறு கைத்தொழில் செய்வதற்கு ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பு உண்டு. அத்துடன் அறைகள் வாடகைக்கு உண்டு.
077 724 2427, 077 741 2713

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
பரீட்சைகளில் "A" சித்தி பெற ஆண்டு 10,11,12 மாணவர்களுக்கு சிறு குழுக்களாக அனுபவம் மிக்க ஆசிரியர்கள் மூலம் தனித்தனி கவனம் கொடுத்து வகுப்புகள்.
குபேரன் கட்டட மாடி,
பிரான்பற்று வீதி, சங்கானை.
(CS/24042) J-1
077 675 1649

**வாடகைக்கு**
கொக்குவில் ஆடியபாதம் வீதியை அண்மித்த பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட இரு வீடுகள் வாடகைக்கு உண்டு.
(CS/24043) J-1
076 852 3121, 077 354 6648

**தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு**
அச்சுவேலி - வசாவிளான் பிரதான பாதையிலிருந்து செல்லும் தொழிற்பேட்டை வீதியில் சுமார் 38 பரப்பு செம்மண் காணி வற்றாத கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 921 5550

**அறை வாடகைக்கு**
யாழ்ப்பாணம் பஸ்தரிப்பிடத்திற்கு அருகாமையில் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு மாதாந்த அடிப்படையில் அறைகள் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- 076 808 5192

# அரச இயந்திரத்தின் அட்டூழியத்தை மௌனமாக கடந்துசெல்லப்போகிறோமா?

### சைவமகாசபை கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 10

சிவராத்திரி நாளில் பல்வேறு அட்டூழியங்கள் தொன்றுதொட்டு வழிபட்டு வரும் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவிலில் அரச இயந்திரத்தால் அரங்கேற்றப்பட்டுள்ளது. நாம் இன்னும் மௌனமாக இவற்றைக் கடந்துபோகப் போகின்றோமா? என அகில இலங்கை சைவமகாசபையின் பொதுச் செயலர் ப.நந்தகுமார் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாம் இன்று இதற்கு எதிர்வினையாற்றாவிட்டால் நிச்சயம் நாளை எல்லா எல்லைப்புற ஆதிசிவன் கோவிலிலும் அடியவர்களுக்கு இந்தக் கதி ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் போய்விடலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவிலில் மகாசிவராத்திரி வழிபாட்டினபோது பக்தர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அராஜகங்கள் மனதை வருத்துகின்றன. எமது வழிபாட்டுரிமை முற்றாக மறுதலிக்கப்பட்டிருக்கின்றது. பக்தர்கள், பெண்கள், சிறுவர், வேலன் சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வேறுபாடு இன்றி மிகப் பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டு சிவாலயத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளனர். தண்ணீர்த் தாங்கிகூட அனுமதிக்காது குழந்தைகள் உட்பட அடியவர்கள் தாகத்துடன் தவிக்க விடப்பட்டுள்ளனர்.

இறைசிவனின் மீது அசையாத பற்றுறுதியோடு இந்தப் பாரிய மோசமான மத அடக்குமுறையை வழிபாட்டுரிமையை மறுதலிப்பை மனிதநேயத்தை கிஞ்சித்தும் கருத்திற் கொள்ளாத அராஜகத்தை ஒவ்வொரு சைவத்தமிழனும் கண்டிக்க நீதி கேட்க களத்துக்கு வரவேண்டும் - என்றார். (ஒ-66)


**நல்லூரில் வீடு விற்பனைக்கு**
யாழ். நல்லூர் பகுதியில் சுற்று மதிலுடன் கூடிய 1 1/2 பரப்புக் காணியில் இரண்டு அறைகளுடன் கூடிய வடக்கு வாசல் வீடு அமைதியான சூழலில் விற்பனைக் குண்டு.
தொடர்புகளுக்கு:
074 240 9637, 077 933 7329

**குருக்கள் / உதவி குருக்கள் தேவை**
கொழும்பு 13, ஜிந்துப்பிட்டி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு குருக்கள் / உதவிகுருக்கள் தேவை.
தங்க வீடு வசதியும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.
விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு - 13.
Phonne: 0722 223340 / 0722 447606 / 0777 261777
Email:murugan[illegible]

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் தர்மபாலா

(இளைப்பாறிய புகையிரத களஞ்சியக் காப்பாளர்)



தோற்றம் 10.04.1957 மறைவு 08.03.2024

மானிப்பாய் பிறப்பிடமாகவும் கொழும்பு தெமட்டகொட மற்றும் திருநெல்வேலி கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மபாலா அவர்கள் (08.03.2024) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம்-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் ஞானசௌந்தரியின் அன்பு மருமகனும் சந்திரிகாவின் அன்புக்கணவரும் ரத்னாங்கி, சித்ராங்கி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான மகிழினி, வசந்தராணி மற்றும் சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரத்தினராஜா, பாலகுமார், இரவிசந்தர், இரவிகரன், இரவிதாஸ், இரவிசங்கர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொறுமையின்...

சிவராத்திரி வழிபாடுகளை முன்னெடுக்க விடாது பொலிஸார் மேற்கொண்ட பலப் பிரயோகம் மற்றும் 8 பேர் கைது செய்து மறியலில் வைக்கப்பட்டுள்ளமை ஆகியவை தொடர்பில் கண்டித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள - பௌத்த பேரினவாதத் திமிரில் சிறிலங்கா பொலிஸ் திணைக்களம் நடந்து கொண்டிருக்கின்றது. வெடுக்கு நாறிமலையை ஆக்கிரமிக்க சிங்கள - பௌத்தர்கள் துடிக்கின்றனர். அவர்களின் ஏவல் நாய்களாகச் செயற்பட்ட பொலிஸார் எமது மக்களைக் கைது செய்திருக்கின்றனர்.

சிவராத்திரி அன்று வெடுக்குநாறிமலையில் குழப்பம் விளைவிக்கும் வகையில் சிங்கள மக்களை அறைகூவி அழைத்த, குருந்தூர்மலையின் விகாராதிபதிக்கு எதிராகவே பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அதைவிடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு கீழ்ப்படிந்து செயற்பட்ட இந்துக்கள் மீது பொலிஸார் தங்கள் காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டியமை ஏற்கமுடியாதது.

பொலிஸார் 8 பேரைக் கைது செய்து விட்டு அவர்களது கைதுக்கான காரணத்தை இப்போதுதான் தேடுகின்றனர். ஏதாவது சூழ்ச்சிகள் செய்து அவர்களைச் சிறையிலடைப்பதற்கும் சிந்திக்கக் கூடும். அதற்கான திட்டங்களை சிங்கள - பௌத்த மேலாண்மையை நிலைநிறுத்தச்செயலாற்றும் அரசதிணைக்களங்கள் செயற்படுத்துவதாக ஊர் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

அவ்வாறு ஏதாவது நடக்குமாக இருந்தால் எமது மக்கள் பார்த்துக்கொண்டு பேசாமடைந்தகளாக இருக்கமாட்டார்கள். பொறுமைக்கும் எல்லையுண்டு. வெடுக்கு நாறி ஆலய விவகாரத்தில் அன்றிலிருந்து இன்று வரை பொலிஸாரின் பாரபட்சமான செயற்பாடுகள் எமக்குப் பெரும் ஆத்திரத்தையே ஏற்படுத்துகின்றது. விளைவுகள் விபரீதமாவதற்குள் அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிட்டு தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## இந்துக்களுக்காகத்...

ஒருங்கிணைப்பாளர் சீமான்.

வெடுக்குநாறிமலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொலிஸாரின் அடாவடி தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

ஈழ நிலத்தில் 2 இலட்சம் அப்பாவி தமிழர்களைத் துள்ளத்துடிக்கப் படுகொலை செய்து முடித்த பிறகும், தமிழர்கள் மீதான வன்மமும், இனத்துவேசமும் துளியும் அடங்காது இன அழிப்பு நடவடிக்கையைத் தொடர்ச்சியாக அரங்கேற்றி வருகின்றது. அதன் நீட்சியாக, தமிழர் அடையாளச் சிதைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமிழர் பண்பாட்டு விழுமியங்களையும், தொன்மைச்சான்றுகளையும் மெல்ல மெல்ல அழிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது சிங்கள இனவாத அரசு.

அருகாமையிலிருக்கும் ஒரு நாட்டில் இத்தகைய இனவெறிக்கொடுமைகளும், பண்பாட்டு அழிப்பு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும்போதும் இந்தியாவை ஆளக்கூடிய பா.ஜ.க. அரசு அதுகுறித்து எவ்வித எதிர்வினையும் ஆற்றாது அமைதிகாப்பது ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் இழைக்கும் பச்சைத்துரோகமாகும்.

வழிபாட்டு உரிமையையும், வாழ்வதற்கான உரிமையையும் மறுத்து தமிழ் மக்களை அழித்தொழிக்கும் இலங்கையின் இனவாதக் கொடுமைகளை ஐ.நா. சபை உள்ளிட்ட அமைதியை விரும்பும் சர்வதேச அமைப்புகள் உடனடியாகக் கண்டிப்பதோடு, தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வான ஈழத்தாயக விடுதலைக்கான பொதுவாக்கெடுப்பையும் நடத்த முன்வரவேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

## வடக்கின்...

மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்படி 56.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் தனது முதலாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 70.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் தனது இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமான நிலையில் மேலதிகமாக 9 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் சகல இலக்குகளையும் இழந்தது அந்த அணி. அந்த அணி சார்பில் அஜய் 23 ஓட்டங்களையும், சிமில்டோன் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் கஜகர்ணன், அசந்த் சாம்சன் ஆகியோர் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

79 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எதுவித இலக்கு இழப்பின்றி 81 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக அபியோசுவாந் 50 ஓட்டங்களையும் சச்சின் கணபதி 30 ஓட்டங்களையும் பெற்றனர். 117ஆவது வடக்கின் பெரும் போரில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 10 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது. (அ-ஒ-5)

## ஆலயத்தினரைச்...

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டுக்காக நேற்றுமுன்தினம் பகல்வேளை, பல தடைகளையும் தாண்டி பக்தர்கள் சென்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோரும் அங்கு சென்றிருந்தனர்.

அன்றையதினம் இரவு ஆலயச் சூழலில் நிற்கக்கூடாது எனத் தெரிவித்த பொலிஸார், அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டவர்களை வலுக்கட்டாயமாகப் பலப்பிரயோகத்தைப் பாவித்து வெளியேற்றியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றையதினம் வெடுக்குநாறிமலை ஆலயச் சூழலில் புதிதாக ஓரிடத்தில் நெருப்பு மூட்டப்பட்டமைக்கான தடயங்கள் காணப்படுவதாக அதைச் சென்று பார்வையிட்ட மக்கள் தெரிவித்தனர். ஆலய நிர்வாகத்தினர் கோயில் அன்னதானத்துக்காக வெட்ட வெளியிலேயே நேற்றுமுன்தினம் நெருப்பு மூட்டியிருந்தனர். ஆனால், அந்த இடத்திலிருந்து மாறுபட்டதாக புதிதாக வேறொரு இடத்தில் நெருப்பு மூட்டிய அடையாளங்கள் காணப்படுகின்றன.

தொல்பொருள் சின்னத்துக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டை முன்வைப்பதற்காகத் திட்டமிட்ட சதிமுயற்சியாக புதிதாக ஓர் இடத்தில் நெருப்பு மூட்டப்பட்டிருக் கக்கூடும் என மக்கள் தெரிவித்தனர். (அ-ஒ-5)

## மருந்து....

வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம், கொட்டடிப் பகுதியில் உள்ள சிவன்பண்ணை வீதியில் இந்த உற்பத்தி நிறுவனத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகவும், பிரிட்டனில் பிறந்தவருமான அர்னன் மனோஜ் ஜோஹில் என்ற இளைஞர், சுமார் 20 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் இந்த நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளார்.

"வடக்கு இளையோருக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதையும், உள்ளூர் விளைபொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்பையும் பிரதான நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மருந்துவகைகள் மானிய அடிப்படையில் இலங்கை மக்களுக்கு விநியோகிக்கப்படும். பொருளாதார நெருக்கடியால், இலங்கையில் மருந்துவகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும் இந்தக் காலகட்டத்தில் மானிய விலையில் சர்வதேசத் தரம் வாய்ந்த மருந்துவகைகளையும், ஊட்டச்சத்து மாத்திரைகளையும் பெறும் வாய்ப்பை நாம் ஏற்படுத்தியுள்ளோம்" என்று ஆரம்ப நிகழ்வின்போது மெட்டோபோலொஜி நிறுவனத் தலைமை அதிகாரியான அர்னன் மனோஜ் ஜோஹில் தெரிவித்தார். (அ-ஒ-26)

## 110 ஏக்கர்...

நடைபெறவுள்ளது.

தென்மயிலையில் 24.79 ஏக்கரும், வறுத்தலைவிளானில் 23.27 ஏக்கரும், அரியாலையில் 0.48 ஏக்கரும், காங்கேசன்துறையில் 20.03 ஏக்கரும், பண்டத்தரிப்பில் ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான காணியும் யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சியில் பாரதிபுரத்தில் 10.36 ஏக்கரும், கிளிநகரில் 2.48 ஏக்கரும், பாரதிபுரத்தில் 1.52 ஏக்கரும், குமாரபுரத்தில் 15.08 ஏக்கரும், வாடியடியில் 1.2 ஏக்கரும், பரமன்கேணியில் 8.38 ஏக்கரும், பொன்னாவெளியில் 1.97 ஏக்கரும் இன்று விடுவிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் விடுவிக்கப்படவுள்ள காணி உரிமையாளர்களை இன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5-66)

## தேசிய...

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் களுத்துறை சென். ஜோன்ஸ் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மகாஜனக் கல்லூரி சம்பியனானது.

முதலாவது பாதியாட்டத்தில் 1:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்த மகாஜன, இரண்டாவது பாதியாட்டத்தில் மேலும் இரு கோல்களைப் பெற்று 3:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது. தரணிகா 2 கோல்களையும், சஸ்மி ஒரு கோலையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். (அ-ஒ-இ)

பகுதி நேர வேலைவாய்ப்பு
உணவகம் ஒன்றிற்கு பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு யாழ் நகரில் வசிப்பவர் தேவை
தொடர்புகளுக்கு: 074 386 3050

நயினை அம்மன் திருமண சேவை
விரைவான சகல சமூகங்களுக்குமான உள்நாட்டு, வெளிநாட்டு திருமண சேவை
பதிவுக் கட்டணம் இலவசம்.
G.P.S Road, Kalviyankardu
076 050 3863, Whatsapp: 076 311 9485

காணி விற்பனைக்கு
Northern Hospital இற்கு அருகாமையில் 12 அடி பாதையை முகப்பாகக் கொண்ட பலாலி வீதியில் இருந்து இரண்டாவது காணி விற்பனைக்கு உண்டு. ஒன்றே முக்கால் பரப்பு மொத்தமாக 45 மில்லியன் (விலை பேசி தீர்மானிக்கலாம்). பார்வையிடும் நேரம் ஞாயிறு (இன்று) மாலை 4.00-6.00 மணி
தொடர்புகளுக்கு: 077 803 8739

காணி விற்பனைக்கு
பருத்தித்துறை வீதியில் புத்தூர்ச் சந்தியிலிருந்து - கைதடி, சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து 100m இல் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
2 பரப்பு - 4 1/2 லட்சம். கையிருப்பில் 16 காணித்துண்டுகள் மாத்திரம் உள்ளன.
தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்:
காலை: 8.30 - மாலை 6.00
தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

**அச்சக இயந்திரங்கள்**

1. DAVIDSON - 500 - 01
2. K.O.R.A - BLACK LONG BOX - 01
3. பனர் மெசின் - 6 அடி - 01
4. U.V வானிஸ் மெசின் - 24" - 01
5. ஜெனரேட்டர் - Lister - ENGLAND 20 KV - 3 Pase - 01

தொடர்பு:- 077 306 8982

(CS/54315) J-1

## வேலைவாய்ப்பு அறிவித்தல்

**Executive Accounts and Admin (Female)**

**யாழ்ப்பாணக்கிளை**

- தகைமைகள் : க.பொ.த உயர்தர சித்தி
  - : ஆங்கில மொழியில் சிறந்த தொடர்பாடல் திறன்
  - : சிங்கள மொழி தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
  - : சிறந்த கணினி அறிவு
  - : மோட்டார் சைக்கிள் Licence பெற்றிருத்தல்
- வயது : 25க்கு மேற்பட்டவர்

**உங்கள் சுய விபரக்கோவையை 10 நாட்களுக்குள் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.**

info@tradefirst.lk

(CS 54289) S-1

**Grade 10-11 Science**
**A/L Chemistry English Medium**

2024, 2025 Batch Tamil/ English ஆசிரியரால் (B.Sc, M.Sc Chemistry) குழுவாக கற்பிக்கப்படும்.

076 410 5838

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
தனி, குழு வகுப்பு
ஆண்டு 7 to GCE OL , AL,
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A 077 766 8725

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில்

Lathe work (கடைசல் வேலை), mig welding and tig welding work வேலை தெரிந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

077 244 8216 / 076 281 1066

(cs.54303) (N-1)

## வீட்டுப் பணிப் பெண் தேவை

**கோண்டாவிலில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலை செய்ய வீட்டு பணிப்பெண் தேவை.**

(நாளாந்த சம்பளம் 1200 - 1500)

077 989 8470

(CS/24044) J-1

**Software Engineering Course O/L, A/L** KODEUM

முடித்த மாணவர்கள்,
IT வேலை மாற்றம்
விரும்புபவர்களுக்கான
**Website Development Bootcamp**



பாடநெறி முடிவில்
**INTERNSHIP**
வாய்ப்புகள்.

பாடநெறி உள்ளடக்கம்

- HTML, CSS, Tailwind CSS
- Javascript & React js
- Node js, Express js
- Mongo DB
- Agile Methodology
- Github Workflow
- Industry Practices
- Full Stack Project
- Interview Preparation

LIMITED SEATS ONLY!

பதிவிற்கு தொடர்புகொள்ளவும்

+ 94 77 882 3376 ||
+ 94 75 882 3375

www.kodeum.io

STARTING ON: 18.03.2024

## Vacancy

இலங்கையில் முதல்தர நிறுவனத்திற்கு வேலை செய்வதற்கு யாழ்மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட விற்பனைத் துறையில் இரண்டு வருடம் அனுபவம் உள்ள Sales Executive தேவை.

077 150 4110, 076 035 0280

(CS/28100) J-1

## மணமகன் தேவை

யாழ். இந்து (D) குற்றமற்ற சூரியன், செவ்வாய் 1989ல் பிறந்த அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் BA பட்டதாரி மணமகளுக்கு அரச அல்லது தனியார் தொழில் புரியும் மணமகன் தேவை.

தொடர்பு:- 077 296 4791

(CS/24314) J-1

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் செல்வமஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் பலாலி வீதியில் 18 அடி பாதையுடன் 7 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 229 4985, 077 621 2039

(CS/24021)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை பிரதான (AB21) வீதியில் காங்கேசன்துறை வெளிச்ச வீட்டிலிருந்து 150m தூரத்தில் K.K.S துறைமுகத்தை நோக்கி இரண்டரை (2 1/2) நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 304 9820, 077 312 6445

(CS/24278) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

### நெல்லியடி நகரத்தில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நெல்லியடி நகரத்திலிருந்து 2 km தூரத்தில்
- விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 500m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பெற்றோல் செற் முன் வீதியில் 2 Km தூரத்தில் நெல்லியடி
- பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2 Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: 071 173 3911 / 076 853 5022

(CS/24035) (N-1)

## காணி விற்பனைக்கு உண்டு

### அச்சுவேலியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- அச்சுவேலியில் இருந்து சன்னதி கோயில் பிரதான வீதி அருகாமை
- அச்சுவேலி பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து 1.5Km தூரத்தில்
- பிரதான வீதியிலிருந்து 200m தூரத்தில்
- தீத்தாம் பிள்ளையார் கோவிலில் இருந்து 100m தூரத்தில்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி
- நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)


பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: 076 739 0413, 074 027 5135

(CS 24034) A-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 08 . 1951 | 09 . 03 . 2024 |



### சுப்பிரமணியம் சிவராசா

மணக்கும்பானைப் பிறப்பிடமாகவும், யாழ். கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவராசா நேற்று (09.03.2024) சனிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - நாகேஸ்வரி (புளியங்கூடல்) தம்பதியரின் மருமகனும், விமலாவின் அன்புக் கணவரும், அகிலன், தாட்சாயினி, டிலக்சன்,கயந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவவேனி, துஷ்யந்தன், பவித்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுரிக்கா, திஷாந், ஆருத்ரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், லோகேஸ்வரன் காலஞ்சென்றவர்களான மங்களேஸ்வரன், வனிதாமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குலராசபதி, பத்மநாதன், ரகுநாதன், சாந்தினி, சிவநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.03.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

154 மங்களவாசா,
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 645 0699

(CS/29395) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper

# சஞ்சீவி

சதி செயல் செய்தவன் புத்திசாலி –
அதை சகித்துக்கொண்டிருந்தவன் குற்றவாளி
உண்மையைச் சொல்பவன் சதிகாரன்
இது உலகத்தில் ஆண்டவன் அதிகாரம்!
-கண்ணதாசன்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மாசி 27 ...கிழமை (10.03.2024) சிகரம் : 191



நிலாந்தன்

# வானத்திலிருந்து யாழ்ப்பாணத்தை பார்த்த மாணவர்கள்

இம்மாதம் ஆறாந் திகதியிலிருந்து பத்தாம் திகதி அதாவது இன்றுவரையிலும் யாழ் . முற்ற வெளியில் [S1] எயார் டாட்டு 2024 (Air tattoo 2024 ) என்ற பெயரில் ஒரு கல்வி மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி இடம்பெறுகிறது. சிறீலங்கா விமானப்படையில் 73 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஒழுங்கு செய்யப் பட்டிருக்கும் இந்தக்கண்காட்சியில் விமானப் படையினரின் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப விளக்கங்களும் வான சாகசங்களும் இசை அணிநடைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. கல்வி மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி என்ற அடிப்படையில் பாடசாலைப் பிள்ளைகள் இதில் உள்வாங் கப்பட்டுள்ளார்கள்.

விமானங்களின் இயக்கங்கள் தொடர்பாக மாணவர்கள் விளக்கம் தருகிறார்கள். மேலும் மாணவர்களுக்கு சிறிதுநேரம் ஹெலிகொப்டரில் பயணம் செய்ய வாய்ப்புத் தரப்பட்டது. மாணவர்களும் உட்பட பெற்றோரும் ஏனையவர்களும் விருப்பத்தோடு உலங்குவானூர்திகளில் ஏறிப் பயணம் செய்வதை காணக்கூடியதாக இருக்கிறது. வடக்கில் உள்ள வெவ்வேறு பாடசாலைகள் இருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட பிள்ளைகளுக்கு ஹெலிகொப்டரில் பறப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை விருப்பத்தோடு அனுபவித்தார்கள். வானத்திலிருந்து யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதில் அவர்களுக்கு ஆர்வம் இருக்கும். முதலாவது பறப்பு அனுபவம் அவர்களுக்குப் பரவசமூட்டக் கூடும். ஆனால் இதே வானத்தை அவர்களுடைய பெற்றோரும் பெற்றோரின் பெற்றோரும் பயத்தோடும் பிரார்த்தனைகளோடும் அண்ணாந்து பார்த்த ஒரு காலம் உண்டு என்பதை அவர்களுக்கு யார் சொல்லிக் கொடுப்பது?

15 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களுக்கு வானம் ஒரு மரணக்கூரையாக காணப் பட்டது. வானில் போர்விமானங்கள் தோன்றும் போது இந்தப் பிள்ளை களின் பெற்றோரும் பெற்றோரின் பெற்றோரும் பதுங்குகுழிகளுக் குள் ஓடி ஒளித்தார்கள். அவ்வாறு பதுங்குகுழி களுக்குள் புகலிடம் தேடிய சிலருக்கு பதுங்குகுழியே புதைகுழியாகவும் மாறியதுண்டு. யுத்தம் வாழ்க்கையை விடவும் நிச்சயமானது போல தோன்றிய அந்தக் காலகட் டத்தில் சிறீலங்காவின் வான்படை தமிழ்மக்கள் மீது குண் டுகளைப் போட்டது. வானத்தையும் காற்றையும் கிழித்துக் கொண்டு போர்விமானங்கள் தமிழ்மக்களின் தலைகளை நோக்கி குத்திப் பதிந்தன.

பயணிகள் போக்குவரத்து விமானம் ஆகிய "அவ்ரோ" ரக விமானங்களில் இருந்து தொடங்கி சியாமா சற்றி, அன்ரனோவ், புக்காரா, கிபிர், சுப்பர்சொனிக், மிக், சீனத் தயாரிப்பான வை-12 முதலான பல்வேறு நாட்டு தயாரிப்புகளும் தமிழ் மக்களின் இரவுகளையும் பகல்களையும் கனவுகளையும் குண்டுகளால் பிளந்தன.

ஈழப்போரின் முதலாவது கட்டத்தின்போது பயன்படுத்தப் பட்ட அவ்ரோ என்று அழைக்கப்படும் பயணிகள் விமானம் பீப்பாய்க் குண்டுகள் என்று தமிழ் மக்களால் அழைக் கப்பட்ட குண்டுகளை வீசியது. சிலசமயங்களில் பீப்பாய்களில் குண்டுகளுக்குப் பதிலாக மனிதமலம் நிரப்பப்பட்டிருந்தது. அப்படித்தான் சீனத் தயாரிப்பான வை=12 விமானத்தை தமிழ்மக்கள் சகடை என்று அழைத் தார்கள். மெதுமெதுவாக மிக உயரத்தில் பறந்து போகும்



**சிறீலங்கா விமானப்படை தமிழ்மக்களை வீட்டுக்கும் பதுங்கு குழிக்கும் இடையே கிழிபட வைத்தது. அந்தப் போரில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் இப்பொழுது முற்ற வெளியில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கின்றது.**

**ஒருகாலம் தமிழ் மக்களைக் கொல்லும் கருவிகளாகக் காணப்பட்டவை இப்பொழுது கண்காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டிருப்பது ஒரு மாற்றம்தான்.**

அந்த விமானத்திலிருந்து எவ்வளவு பெரியகுண்டைப் போட முடியுமோ அவ்வளவு பெரியகுண்டு போடப்பட்டது. ஒருகுண்டு ஒரு பெரிய வீட்டை அப்படியே தரைமட்டமாக் கியது.

ஈழப்போரின் அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளின் போது மிக நவீன குண்டு வீச்சு விமானங்கள் அரங்கினுள் பிரவேசித்தன. அவை காற்றையும் வானத்தையும் கிழித் துக்கொண்டு குத்திப் பறந்து குண்டுகளை வீசின. சந்தைகள், சாவடிகள், பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங் கள் என்று பொதுசன இலக்குகளின் மீதும் குண்டுகள் வீசப்பட்டன. நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் கொல்லப் பட்டார்கள். அல்லது உடல் உறுப்புகளை இழந்தார்கள். சொத்துக்களை இழந்தார்கள்.

குண்டுவீச்சு விமானங்கள் மட்டுமல்ல, கண்காணிப்பு விமானங் கள் அதாவது வேவு விமானங்களும் தமிழ்மக்களின் இரவுகளையும் பகல் களையும் வேவு பார்த்தன. நான்கு கட்ட ஈழப்போர்களின் போதும் வானில் வேவு விமானங்கள் நிரந்த ரமாக ரீங்காரமிட்டபடி பறந்தன. குறிப்பாக இறுதிக்கட்டப் போரில் வானில் வேவு விமானங்கள் சூரியனைப் போல சந்திரனைப் போல நட்சத்திரங்களைப் போல நிரந்தரமாக காணப்பட்டன.

சோளகக் காற்று பலமாக வீசும் காலங்களில் யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளில் பட்டங் கள் பறக்க விடப்படும். பிரமாண் டமான பட்டங்களில் விண் பொருத்தப்படும். காற்றில் விண் அதிரும் பொழுது ஒரு வித ரீங்கார ஒலியை எழுப்பும். யுத்தம் இல்லாத காலங் களில் சோளகக் காற்று வீசும் இரவுகளில் பட்டங்களின் விண் ஒலி வானத்தில் நிரந்தரமாக உறைந்து நிற்கும். அதுபோலவே யுத்த காலங்களில் வேவு விமானங்களின் ரீங்கார ஒலி வானில் நிரந்தரமாக உறைந்து நின்றது.

இறுதி கட்டப் போரின் இறுதி நாளுக்குப் பின்னரும் அது கேட்டது.

சிறீலங்கா விமானப்படை தமிழ்மக்களை வீட் டுக்கும் பதுங்குகுழிக்கும் இடையே கிழிபட வைத்தது. போரில் குண்டுகளை, துண்டுப் பிர சுரங்களை வீசிய அதே வான்படை ஆயுதமோ தல்கள் முடிவுக்கு வந்தபின் நல்லூர்த் தேர்த் திருவிழாவில் பூக்களைத் தூவியது. அந்தப் போரில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் இப்பொழுது முற்ற வெளியில் காட்சிப் பொரு ளாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஒருகாலம் தமிழ் மக்களைக் கொல்லும் கருவிகளாகக் காணப்பட்டவை இப்பொழுது கண்காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டிருப்பது ஒரு மாற் றம்தான்.

காங்கேசன்துறை வீதியில் அமைந்திருக்கும் "ஃபொக்ஸ் ரிசோர்ட்ஸ்" என்று அழைக்கப்படு கின்ற விருந்தினர் விடுதியில் யுத்தகாலத்தில் வெட்டப்பட்ட பதுங்கு குழிகள் காட்சிக் கூடங்களாக மாற்றப்பட்டுள்ளன. அந்தக் கட்டடம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணம் இருந்த காலகட்டத்தில் அவர்களுடைய பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமையக மாக இருந்தது. அந்தக் கட்டடத்துக்கு கீழே பாதுகாப்பான பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆயுத மோதல் கள் முடிவுக்கு வந்த பின் அந்தக்கட்டடத்தின் உரிமையா ளர் அதை விருந்தினர் விடுதியாக மாற்றியுள்ளார். அங் கிருந்த பதுங்கு குழி ஞாபகச்சின்னமாக ஒரு "ஷோகேஸ் பீசாகப்" பேணப்படுகின்றது. அதன் சுவர்கள் செப்பனிடப்பட்டு, அழகாக்கப்பட்டு, அது ஓர் ஓவியக்கூடமாக, உல்லாசப் பயணிகளைக்

06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி.க்குப் புனிதர் பட்டம்?



## கனடா செல்லும் அநுரகுமாரவை அங்குள்ள சில புலம்பெயர்தமிழர் வரவேற்பார்களா?

○ அ.நிக்ஸன்

ஜே.வி.பி.யின் அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கா, கனடாவுக்குப் பயணம் செய்யவுள்ளார். அவரை அங்குள்ள புலம்பெயர் தமிழர்கள் சிலர் வரவேற்கவுள்ளனர் என்று செய்திகளும் வெளியாகிக் கொண்டேயிருக்கின்றன.

ஜே.வி.பி. பற்றிய விம்பம் மிகச் சமீபகாலமாக அரசியல் நோக்கில் கட்டமைக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக இந்தியாவுக்குச் சென்று வந்த பின்னர் ஜே.வி.பி. யின் பாவங்கள் கழுவப்படுகின்றன.

போரால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் சிலர் ஜே.வி.பி. மீது நம்பிக்கை வைக்கிறார்கள் , புதிய மாற்றம் என்று வேறு சிலர் புகழாரம் சூட்டுகிறார்கள். அனுரகுமார திஸாநாயக்க நல்லவர், வல்லவர் என்றும் சிலர் மார்தட்டுகிறார்கள். சிங்களவர்கள் ஜே.வி.பி.யை நம்புவதும் விசுவாசிப்பதும் வேறு.முஸ்லிம்களும் ஜே.வி.பி.யை நம்பும் அளவுக்கு இல்லை.

ஆனாலும், சிங்கள மக்களில் அதிகமானோர் ஜே.வி.பி.யை இன்னமும் ஓரக் கண்ணாலேயே பார்க்கின்றனர். முழுமையாக நம்பத் தயாராக இல்லை. இந்தப் பின்னணியில் ஈழத்தமிழர்களுக்கு ஜே.வி.பி. மீது திடீர்ப்பாசம் வரத் தொடங்கிவிட்டதா? 1994 இல் சந்திரிகா முதன முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது, அவர் வழங்கிய 'கேக்' துண்டில் நஞ்சு கலந்த ஐஸ்கிறீம் பூசப்பட்டிருப்பதை அறியாமல் தமிழர்கள் பலரும் அன்று வாங்கி உண்டார்கள். அவருக்கு வாக்களித்திருந்தனர். தேவதை போன்றும் அவரைச் சித்திரித்தனர். 64 சதவீத வாக்குகளுடன் இலங்கை அரசியல் வரலாற்றில் சந்திரிகா ஜனாதிபதியானார்.

ராஜீவ் காந்தியை புலிகள்தான் கொலை செய்தார்கள் என்ற சந்தேகத்துடன் மாத்திரம் இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தபோது, புலிகள் தான் அவரைக் கொலை செய்தார்கள் என்று கண்கண்ட சாட்சி போன்று சந்திரிகா 1995 ஆம் ஆண்டு மே மாதம் புதுடில்லியில் இந்திய ஊடகங்களிடம் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

1996 இல் இடம்பெற்ற செம்மணிப் புதைகுழியில் இருந்து சந்திரிகா அரசு பதினொரு வருடங்கள் நடத்திய இன அழிப்புக்குத் தனித்த வரலாறு உண்டு. ஆனால், அதையும் மறந்து சந்திரிகாவை மீண்டும் தேவதை என்று கூறுமளவுக்குத் தமிழர்கள் சிலர் முன்வந்துள்ள சூழலில் ஜே.வி.பி.க்கும் புனிதர் பட்டம் கொடுக்க ஆரம்பித்துள்ளமைதான் பெரும் வெட்கக்கேடு.

சந்திரிகாவை தேவதை என்று 1994 இல் வர்ணித்தமைக்கு ஒப்பாக இன்று அனுரகுமார திஸாநாயக்காவை புனிதர் என்று கூறும் அளவுக்கு நிலைமை மாறி வருகின்றது என்றால், தமிழர்களிடம் பட்டறிவு இல்லையா? அல்லது ஞாபக மறதியா?

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது 2000 ஆம் ஆண்டு முதன் முதலில் ஜே.வி.பி.யின் அப்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்க பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு வர அனுமதிக்கப்பட்டார். அப்போதிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் காமினி அத்துகோரள மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஆகியோர் சந்திரிகாவுக்கு கொடுத்த அரசியல் குடைச்சலால் குழப்பமடைந்த சூழலிலேயே சோமவன்ஸவின் வருகைக்கு சந்திரிகா அனுமதியளித்திருந்தார்.

1994 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டிருந்த ஜே.வி.பி. தேசியப்பட்டியல் மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றிருந்தது. நிஹால்கலபதி முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றபோது சந்திரிகா அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தார். அந்த உறவின் நீட்சிதான் சோமவன்ஸ அமரசிங்கவுக்கு இலங்கைக்கு வருவதற்கான அனுமதியும் 2004 இல் அனுரகுமார திஸாநாயக்கா விவசாய அமைச்சராகப் பதவியேற்பதற்கும் காரண காரியமாக அமைந்திருந்தன.

2002 இல் சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்திருந்தார். அப்போது விடுதலைப் புலிகளுடன் நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆனால், அதனை விரும்பாத சந்திரிகா ஜே.வி.பி. மூலமாக அன்று கொழும்பில் கடும் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் விமானத்தில் தாய்லாந்தில் இருந்து கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் வந்திறங்கிய போது நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்த அனுரகுமார திஸாநாயக்கா, தரக்குறைவான வார்த்தைகளினால் ஆவேசமாக விமர்சித்திருந்தார்.

2004 இல் சுனாமிப் பேரலையினால் ஏற்பட்ட இழப்புகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2005 இல் சுனாமி அனர்த்த அபிவிருத்திக் கட்டமைப்புக்கான ஒப்பந்தம் ஒன்றில் புலிகளுடன் சந்திரிகா அரசாங்கம் கைச்சாத்திட்டது.

ஆனால் நிவாரணப் பணிகளுக்காக புலிகளுக்கு நிதி வழங்கக்கூடாது என்றும் அதனை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் எனவும் கோஷமிட்டு அன்று ஜே.வி.பி. கடும் எதிர்ப்பில் ஈடுபட்டது. பௌத்த குருமாருடன் சேர்ந்து கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் பொதுக் கட்டமைப்புக்கு நிதி வழங்கும் நாடுகள் பட்டியலில் இருந்து அமெரிக்கா வெளியேறியது. அத்துடன் பொதுக்கட்டமைப்பும் செயலிழந்தது.

2005 டிசெம்பரில் மஹிந்த ராஜபக்சவை ஜனாதிபதிக் கதிரையில் அமர்த்த பெரும் பாடுபட்டதும் இதே ஜே.வி.பி.தான். புலிகளுடன் மஹிந்த ராஜபக்சவைப் போருக்குத் தள்ளியதும் ஜே.வி.பி.தான் என்று சிங்கள மூத்த ஊடகவியலாளர் ஞானசிறி கொத்திகொட 2010 இல் கொழும்பு இதழியல் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் சுட்டிக்காட்டியிருந்தார். ஆகவே ஜே.வி.பி.தான் போருக்குக் காரணம் என்பது பகிரங்கம். 2000 ஆம் ஆண்டு சோமவன்ஸ அமரசிங்க இலங்கைக்கு வந்தவுடன் முதன் முதலில் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஐம்பதாயிரம் சிங்கள இளைஞர்களைத் திரட்டி இலங்கை இராணுவத்தில் இணைத்துப் புலிகளுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்துவேன் என்று சூளுரைத்திருந்தார்.

இந்தச் செய்தி அன்று வெளியான தமிழ், சிங்கள நாளிதழ்களில் பிரதான செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் 2006 இல் இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வடக்கு-கிழக்கு மாகாணங்களை இரண்டாகப் பிரித்ததும் ஜே.வி.பி.தான்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு ஆரம்பம் முதலே எதிர்ப்பு வெளியிட்டு வந்த ஜே.வி.பி. 2006 இல் வடக்கு - கிழக்கைப் பிரித்து தனது இனவாத இச்சையைத் தீர்த்துக் கொண்டது.

2009 மே மாதம் இறுதிப் போர் வெற்றியை மஹிந்த ராஜபக்ச கொண்டாடிய போது ஜே.வி.பி. அந்த நிகழ்வைப் பாராட்டியது. அதன் பின்னரான சூழலிலும் ஜே.வி.பி.யிடம் அரசியல் தீர்வுக்கான எந்தவொரு யோசனைகளும் இல்லை. ஆனால் இவை எல்லாவற்றையும் மறந்துபோன நிலைமையில்தான் தமிழர்கள் சிலர் ஜே.வி.பி.யை புதிய மாற்றம் என்று சித்திரிக்கின்றனர். இலங்கை வரலாற்றில், பயங்கரவாதிகள் என்றால், தமிழ் ஆயுத இயக்கங்களை மாத்திரம் ஞாபகப்படுத்துவது சிங்கள இனவாதத்தின் பண்புகளில் ஒன்று. சர்வதேசமும் அதற்கு விதி விலக்கல்ல.

1987 இல் இலங்கை நாடாளுமன்றத்துக்குள் குண்டு போட்ட பயங்கரவாதிகள், 'தேசப்பிரேமி ஜனதா வியாபாரய' (தேசபக்தி மக்கள் இயக்கம்) என்ற ஜே.வி.பி.யின் இராணுவப் பிரிவுதான். இது அனைத்துச் சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் தெரியும். ஏன் உலகத்துக்கே புரியும்.

விடுதலைப் புலிகள் செய்த கொலைகள் எல்லாம் 'கெட்ட கொலை', ஜே.வி.பி.செய்த படுகொலைகள் எல்லாம் 'நல்ல கொலைகள்' என்ற அர்த்தம் இன்று பல சிங்கள-தமிழ்ப் பிரமுகர்களிடம் உண்டு. ஆனால் கொலை என்றால் அது கொலைதான். நல்லகொலை, கெட்ட கொலை என இரண்டு வகையான கொலைகள் உலகில் எங்குமே இல்லை. சோசலிசத்துக்கான ஆயுதப் போராட்டம் என்று கூறி ஜே.வி.பி. அன்று செய்த கொலைகளை இன்று பலர் மறந்துவிட்டனர். ஜே.வி.பி. கொலையே செய்யவில்லை என்று அநுரகுமார திஸா நாயக்காவின் இரசிகர்கள் இன்று கூற ஆரம்பித்துவிட்டார்கள். இந்த இரசிகர்கள் யார் என்று பார்த்தால் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த புதிய வாக்காளர்களாக இருக்கும் இளைஞர்கள்தான். இதில், தமிழ் இளைஞர்கள் பலரும் உள்ளடங்குவர்.

ஜே.வி.பி. அன்று செய்த கொலைகளை, சட்டத்தரணி அஷோக்பரன் அறிக்கையிட்டிருக்கிறார். கொழும்பில் இருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்றில் அந்த அறிக்கை பிரசுரமாகியிருந்தது. இலங்கையின் பெயர்போன தொழிலதிபரும், முன்னணித் திரைப்படத் தயாரிப்பாளருமான கனகசபை குணரட்ணம் (கே.ஜி), தொழிலதிபர்களான சண்முகம் சகோதரர்கள், சபீர் ஹுசைன் ஆகியோர் 1989 இல் ஜே.வி.பி.யினரால் படுகொலை செய்யப்பட்டனரெனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜினதாஸ வீரசிங்ஹ, கீர்த்தி அபேவிக்கிரம, ஜீ.வி.எஸ்.டி. சில்வா, லயனல் ஜயதிலக்க, அநுர டானியல், மெரில் காரியவசம், டபிள்யூ.எம்.பி.ஜீ. பண்டா, லெஸ்லி ரணகல, தயா சேபாலி சேனாதீர ஆகியோரும், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களான ஹர்ஷ அபேவர்த்தன, நந்தலால் பெர்னாண்டோ, சரத் நாணயக்கார ஆகியோரும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினரான லக்ஷ்மன் சில்வா, லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினரான பி.டீ. விமலசேன, இலங்கை தாராளவாதக் கட்சி வேட்பாளர் ஓ. காரியவசம், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

(03 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு உதவினாரா கடற்படை இயந்திரவியலாளர்?

○ கே.வி.தவராசா

**1996** ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு ஜூன் வரையான காலகட்டத்தில் கடற்படையில் இயந்திரவியலாளராகக் கடமையாற்றியவர் மலையகத்தைச் சேர்ந்த நூர்டீன் மொகமட் நவாப்தீன். 2000 ஆம் ஆண்டு கடற்படை அதிகாரிகளின் முறைப்பாட்டையடுத்து, இவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொழும்பு பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டார். தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நவாப்தீனுக்கு எதிராகக் கடும் விசாரணை நடைபெற்றது. மன்னாரில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் இயந்திரவியலாளராகக் கடமையாற்றும் பொழுது, இலங்கைக் கடற்படையில் இருந்துகொண்டே கடற்படை மற்றும் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய இரகசியங்களைப் புலிகளுக்கு வழங்கினார் என்ற கோணத்தில் இந்த விசாரணைகள் நடத்தப்பட்டன.


### குற்றச்சாட்டுப் பத்திரங்கள் தாக்கல்

பயங்கரவாதப் பிரிவின் விசாரணைகளின் பின்னர் நூர்டீன் மொகமட் நவாப்தீனுக்கு எதிராக 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கும் மார்கழி மாதத்துக்கும் உட்பட்ட காலப்பகுதியில் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு உடந்தையாகச் செயற்பட்டதாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 20 ஆண்டுகள் தண்டனை வழங்கக் கூடிய 2(1) (ஏ) பிரிவின் கீழ் தனித்தனியாக ஐந்து வழக்குகள் 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி சட்டமா அதிபரால் கொழும்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகளில் அரச சாட்சியாக ஒன்பது சாட்சிகளும், வழக்குச் சான்றுப் பொருள்களாக எதிரியான நவாப்தீனால் பொலிஸ் அத்தியட்சகர் காமினி திசாநாயக்காவுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம், மருத்துவச் சான்றிதழ் மற்றும் புலிகளுக்கும் நவாப்தீனுக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல் அடங்கிய ஒலிப்பதிவு செய்யப்பட்ட'கெஸட் நாடா' பிரதிகளைக் கொண்ட கோவைகள், ஒலிப்பதிவு செய்த கருவி என்பன குற்றச்சாட்டுப் பத்திரத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன.



## நவாப்தீன் வழக்கில் நடந்த திருப்பங்கள்




### உண்மை விளம்பல் விசாரணை

சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வழக்குகளில் முதல் வழக்கு நீதிபதி மாலினி ரணதுங்க முன்னிலையில் 2002 ஆம் ஆண்டு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணையில் முதலில் எதிரியினால் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் (உண்மை விளம்பல் விசாரணை) சுயவிருப்பத்தின் பேரில் கொடுக்கப்பட்டதா? அல்லது பலவந்தமாகப் பெறப்பட்டதா? என்பது பற்றிய விசாரணை ஆரம்பிக்கப்பட்டு விசாரணை முடிவில் 'எதிரியினால் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுய விருப்பத்தின் பேரில் கொடுக்கப்படவில்லை. எதிரியின் விருப்பமின்றியே பெறப்பட்டது' என உறுதியானது.

இந்த ஐந்து வழக்குகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முதல் வழக்கில் சட்டமா அதிபரினால் அரச சாட்சிகளாகக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்ற பொலிஸ் அதிகாரி காமினி திசாநாயக்க குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மொழிபெயர்த்த உதவிப் பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் தட்டெழுத்தாளர் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இந்தச் சாட்சிகள் என்னால் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவுசெய்த பொலிஸ் அத்தியட்சகர் இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி சுயவிருப்பத்தில் வழங்கியதாக சாட்சியமளித்துள்ள போதிலும், எனது குறுக்கு விசாரணையில் அவரது சாட்சியத்தில் காணப்பட்ட பல முரண்பாடுகள் வெளிப்படையாகத் தெரிந்தன.

எனது வேண்டுகோளையடுத்து மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நவாப்தீனின் உடலில் தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் தாக்குதலுக்கு உட்பட்டதனால் ஆறு காயங்கள் காணப்பட்டதாக சட்ட மருத்துவ அதிகாரி சாட்சியமளித்தார். அரச தரப்பினதும் விசாரணை முடிவடைந்த பிறகு எதிரி தரப்பினதும் வாதப்பிரதி வாதங்களை செவிமடுத்த நீதிபதி குற்றஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்து கட்டளை வழங்கினார்.

### பிணையில் விடுதலை

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டதை அடுத்து மேல் நீதிமன்றில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டு எதிரிக்கு 2002 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18 ஆம் திகதி பிணை வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் மற்றைய சாட்சியங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. ஒலிப்பதிவு செய்த கருவி, தகவல் அடங்கிய 'கெஸட்' நாடாக்களை அரச தரப்புச் சட்டத்தரணி சாட்சிகளின் மூலம் நீதிமன்றில் சமர்ப்பிக்க ஆயத்தமானபொழுது எதிரியின் சார்பில் நான் பூர்வாங்க ஆட்சேபனையொன்றை முன்வைத்தேன். எதிரிக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்களைப் பதிவு செய்த 'கெஸட்' நாடாக்களை வழக்கின் சான்றுப் பொருள்களில் ஒன்றாக நீதிமன்றில் சாட்சியமாக கொண்டு வரவேண்டுமெனில், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு விசாரணைக்குத் திகதி குறிப்பிடும் தினத்துக்கு 45 நாள்களுக்கு முன்னர் எதிர்த்தரப்புக்கு அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும் எனச் சான்றுக்கட்டளைச் சட்டத்தில் (Evid nece Ordi annce Act No 1995) மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அரசதரப்பில் சாட்சியமாக நெறிப்படுத்தப்படவுள்ள ஒலிபரப்பு நாடாக்களைப் பற்றிய விவரம் அடங்கிய அறிவித்தலை எதிர்த்தரப்புக்குக் கையளிக்கவில்லை. எனவே இந்த ஒலிபரப்பு நாடாக்களை சாட்சியமாக நெறிப்படுத்த முடியாது' - என்ற வாதத்தை நான் முன்வைத்ததைத் தொடர்ந்து, நீதிமன்றம் இந்தவாதத்தை ஏற்றுக்கொண்டது. அதனால் ஒலிபரப்பு நாடாக்களை அரச சாட்சியமாக ஏற்க நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்தது. ஏனைய சாட்சிகள் அரசதரப்பினரால் 10 வருடங்களாக விசாரணையில் நெறிப்படுத்தப்பட்டு 2010ஆம் ஆண்டு மே மாதம் அரசு தரப்பு விசாரணையை முடித்துக்கொண்டது. 10 வருடங்களாக நடைபெற்ற இந்த விசாரணை முடிவில் இரண்டு பக்க வாதங்களையும் கவனத்தில் எடுத்துக் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ச, எதிரியான நவாப்தீனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை அரச தரப்பு நிரூபிக்கத்தவறி விட்டதெனத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டு எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

(தொடரும்)

## ஜே.வி.பி.க்குப்....

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் களுத்துறை அமைப்பாளர் இந்திரபால அபேவீர, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான எல். டபிள்யூ பண்டித, இலங்கையின் முன்னணி நடிகரும், சந்திரிகா குமாரதுங்கவின் கணவரும், இலங்கை மக்கள் கட்சியின் தலைவருமான விஜய குமாரணதுங்க, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தரான பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர, மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான சண்ட்ரட்ன பட்டுவதவிதான, இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் முதலாவது பெண் பணிப்பாளரான முனைவர் க்ளடிஸ் ஜயவர்த்தன ஆகியோரும் ஜே.வி.பி.யால் படுகொலை செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டு உள்ளது.

மேலும் பல பொலிஸ் அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், தனியார் தொழிற்றுறை உத்தியோகத்தர்கள், பெருந்தோட்ட முகாமையாளர்கள், கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்கள் என ஜே.வி.பி. படுகொலை செய்தவர்களின் பட்டியல் மிக நீண்டது. இதில் வெளிநாட்டவர்களும் உள்ளடக்கம்.

இந்தப் படுகொலைப் பட்டியலில் பௌத்த பிக்குகளும் விதிவிலக்கல்லர். கொட்டிக்காவத்தே சத்ததிஸ்ஸ தேரோ, வல்லதொட பண்ணதர்ஸி தோரோ, பொஹொத்தரமுல்லே ப்ரேமலோக தேரர் உள்ளிட்ட பௌத்த பிக்குகளும் ஜே.வி.பி.யினால் படுகொலை செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டு உள்ளது. பல உயிர்களைப் பறித்த இரத்தக்கறை, ஜே.வி.பி. மீது படிந்து கிடக்கிறது. இந்த இரத்தக்கறையை மறைக்க வேண்டிய தேவை, ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு 'ஜனநாயக வழி'க்குத் திரும்பிய ஜே.வி.பி.க்கு இருந்தது. அதற்காக ஜே.வி.பி. எடுத்துக்கொண்ட ஆயுதம் 'பேரினவாதம்' என்று அஷோக்பரன் தனது கட்டுரையில் விமர்சித்திருக்கிறார்.

அதேவேளை, பல கொலைகளில் ஜே.வி.பி. ஈடுபட்டமை தொடர்பாக சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் விவரங்களை வெளியிட்டிருக்கின்றனர். சமகாலத்தில் நடைமுறையில் உள்ள மாகாணசபை முறைகளை இல்லாமல் செய்து, ஈழத்தமிழர்களுக்கான குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கம் கூட அவசியமில்லை என்று பிரசாரம் செய்யும் ஜே.வி.பி. தேர்தல் வெற்றிக்காகவும், இலங்கை ஒற்றையாட்சி அரசின் அதிகாரத்தைக் கைப்பற்றவும் தமிழர்களின் விடிவெள்ளி போன்று காண்பிக்க முற்படுகின்றமை இந்த ஆண்டின் மிகப்பெரிய நகைச்சுவை என்பதையும் மறுப்பதற்கில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு 32 வருடங்கள் கொடுஞ் சிறைவாசத்தின் பின் விடுதலையான பின்னும், தற்போது தமிழ்நாடு திருச்சி, கொட்டப்பட்டு சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையரான **ரொபேர்ட் பயஸ்,** 'உதயன் – சஞ்சீவிக்கு' அவரது சட்டத்தரணி நரேஸ்குமார் ஊடாக வழங்கிய சிறப்பு நேர்காணல் ,



## அடிப்படை வசதிகளுக்கு கூட போராட வே

**கே: உங்கள் குடும்பத்தினருடன் இருந்த நாட்களை விட, அண்மையில் உயிரிழந்த சாந்தனுடன் நீங்கள் இருந்த ஆண்டுகளே அதிகம். இந்த நிலையில் சாந்தனின் இழப்பை எவ்வாறு உணருகிறீர்கள்? அவருடன் இருந்த நாட்கள் தொடர்பாக உங்கள் கருத்து?**

**ரொபேர்ட் பயஸ்:** எனது குடும்பத்தார்களுடன் இருந்ததைவிட அதிக நாட்கள் எமது வழக்கில் உள்ளவர்களுடன் இருந்தது உண்மை தான். சாந்தன் பெரும்பாலும் ஏதாவது படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பார். அதைவிட ஆன்மீகத்தில் ஈடுபாடு உள்ளதால் அதில் அதிகமாக ஈடுபாட்டோடு இருப்பார். இந்த 33 வருடத்திய சிறை வாழ்க்கையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பூந்தமல்லி, செங்கல்பட்டு, சேலம், வேலூர் மற்றும் புழல் மத்திய சிறை எனப் பல சிறைகளில் இருந்துள்ளோம். சி.பி.ஐ. காவல் மிகவும் கொடுமையானது. அதேபோல செங்கல்பட்டு சிறையில் 18 மாதங்கள் சூரியனைக் கூட பார்க்கவில்லை. சரியான உணவும் கிடையாது. இந்தக் காலங்களை நாங்கள் கடந்து வந்த விதத்தை வெறும் வார்த்தைகளால் சொல்லிவிடஇயலாது. சிறு சிறு அடிப்படை விடயங்களுக்குக் கூடப் போராட வேண்டிய சூழ்நிலையிலேயே வாழ்ந்து வந்தோம்.

2012 இல் என்னையும் ஜெயக்குமாரையும் தனியாக புழல் சிறைக்கு மாற்றிவிட்டார்கள். அதற்குப் பின்னர் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு பிறகு திருச்சி சிறப்பு முகாமில் தான் சாந்தனைச் சந்தித்தோம். இருந்தாலும் அவரைப் பார்த்துப் பேசும் வாய்ப்பு மிகக் குறைவு. ஏனெனில் நானும் ஜெயக்குமாரும் ஓர் அறையிலும், முருகனும் சாந்தனும் வேறு அறையிலும் தனித்தனியே அடைக்கப்பட்டிருந்தோம். தனிமைச் சிறையை போன்று தான் சிறப்புமுகாம் வாழ்க்கை. சாந்தன் மட்டுமல்ல சிறப்பு முகாமில் யாரையும் சந்திக்க முடியாத ,உரையாட முடியாத சூழலே இருந்தது. சாந்தன் இறப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர், மருத்துவப் பரிசோதனைக்காக நான் திருச்சி அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்றபொழுது அவரும் என்னுடன் மருத்துவ பரிசோதனைக்கு வந்திருந்தார். அப்பொழுது, தான் விரைவில் நாட்டுக்கு சென்றுவிடுவேன் என்றும் மருத்துவ பரிசோதனையில் தனக்கு எந்த நோயும் இல்லையென்றும் கூறிக்கொண்டிருந்தார்.

நானும் "நல்லது. நன்றாகச் சாப்பிட்டு உடம்பைக் கவனித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பிறகு சில வாரங்களில் சாந்தன் திடீரென மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற தகவல் அறிந்து எனது வழக்கறிஞரை அனுப்பிப் பார்த்தேன். அப்போது கூட தான் விரைவில் நாடு போய் விடுவேன் என்றும், தன்னைப் பார்க்க அனுமதி கேட்குமாறும் சொல்லி இருந்தார். நாம் நேரில் சென்று பார்ப்பதற்கு அனுமதி கொடுப்பது சிரமம் என்பதால் அனுமதி கேட்க முடியவில்லை. நல்லபடியாக நாட்டுக்கு செல்வார் என்று எதிர்பார்த்திருந்த எங்களுக்கு, அடுத்த சிலநாட்களில் அவர் இறந்த செய்திதான் பேரிடியாக வந்து சேர்ந்தது.

**கே: சிறையில் நீங்கள் இருந்ததற்கும் தற்போது சிறப்பு முகாமில் இருப்பதற்கும் இடையே இருக்கும் வேறுபாடுகள் என்ன?**

**ரொபேர்ட் பயஸ்:** நாம் சிறையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சினைகளை சந்தித்து உள்ளோம். மிகவும் நெருக்கடியான எல்லாக் காலங்களையும் கடந்து வந்திருக்கிறோம். அங்கே சிறை விதி இருக்கிறது. அதன்படி தான் சிறை நிர்வாகம் செயல்படும். சிறப்பு முகாமில் அப்படியான எந்த விதிமுறையோ, சட்டத்திட்டங்களோ கிடையாது. இங்கு இதற்குப் பொறுப்பானவர்களாக இருப்பவர்கள் சொல்வதே சட்டம். இங்கே எதையும் கேட்டுப் பெறுவது மிகவும் சிரமம். மாவட்ட ஆட்சியர் தான் இந்த முகாமுக்கு பொறுப்பு, என்றாலும் அவர் நேரடியாக வருவது கிடையாது. அவருக்கு ஒரு மனு எழுதினால் கூட அவருக்கு கிடைப்பது இல்லை. சிறையில் கண்காணிப்பாளர் இருப்பதால் உடனுக்குடன் வேலைகள் நடக்கும். இங்கே அறவே வேலைகள் நடக்காது. அனுப்பும் மனுக்கள் கூட ஆட்சியருக்கு கிடைக்கிறதா என்று நாங்கள் தெரிந்துகொள்ள முடியாது.

ஏதேனும் வழக்கு போட வேண்டுமானால் சத்தியக்கடதாசியில் கையொப்பம் இடமாட்டார்கள். கையொப்பம் இடாத சத்தியக்கடதாசியை நீதிமன்றமும் ஏற்றுக்கொள்ளாது. அதனால் வழக்கு தாமதமாகும்.

சிறையில் நாம் நடையயிற்சி, விளையாட்டு, படிப்பு என்று ஆரோக்கியமாக இருந்தோம். இங்கே அவையனைத்தும் எங்களுக்கு மறுக்கப்பட்டன. அதனாலேயே, நோய்வாய்ப்பட்டு அவதியுறும் நிலையேற்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு மேலாக சூரியனைக்கூட பார்க்க முடியாமல் அறையிலேயே அடைக்கப்பட்டிருந்தோம். சரியாகச் சொல்ல வேண்டுமானால் இது தனிமைச் சிறை தான். நண்பர்கள், நலன்விரும்பிகள் யாரும் மனுபோட்டு பார்க்க முடியாது. வழக்குரைஞர் மனுவுக்கு மட்டும் தான் எங்களை அறையில் இருந்து திறந்துவிடுவார்கள். மூன்று முறை உண்ணாவிரதப் போராட்டம் செய்து தான் அந்த உரிமைகளையும் பெற முடிந்தது.

**கே: தற்போது நீங்கள் அனைவரும் உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதாக சட்டத்தரணி ஊடாக அறிகிறோம். சிறையில் இருக்கும் போது இந்தப் பாதிப்பு ஏற்பட்டதா?**

**ரொபேர்ட் பயஸ்:** உண்மைதான். நாம் இங்கே வரும் போது யாருக்கும் எந்த நோயும் கிடையாது. இங்கே வந்த பிறகு எல்லோருக்கும் நோய்கள் வர தொடங்கின. உடல் நலனையும் மனநலனையும் பேணுவதற்கு உடற்பயிற்சி, விளையாட்டு போன்றவைகள் எங்களுக்கு இங்கு மறுக்கப்பட்டன. நீண்ட போராட்டத்துக்கு பிறகு -15 மாதங்கள் கழித்து - கடந்த ஒருமாத காலமாகத்தான் இதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். மேலும் நன்னடத்தையை மேற்கோள் காட்டி உச்சநீதிமன்றம் எங்களை 11.11.2022 அன்று விடுதலை செய்தது. குடும்பங்களையும் உற்றார், உறவினர்களையும் பிரிந்த 32 வருட நீண்ட சிறைவாசத்தினால் வாழ்க்கையை முழுவதுமாக இழந்து , வாழ்க்கையின் இறுதி நாட்களை யாவது குடும்பங்களோடு செலவிடப் போகிறோம் என்று கனாக்கண்ட எங்களுக்கு மீண்டும் சிறப்பு முகாம் சிறைவாசம் என்பது மனதளவில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**கே: உங்களுக்குரிய அடிப்படை வசதிகள், குறிப்பாக மருத்துவ வசதிகளாவது இலகுவாகக் கிடைக்கின்றனவா? உடனடி மருத்துவ தேவைகள் எவ்வாறு பூர்த்திசெய்யப்படுகின்றன?**

**ரொபேர்ட் பயஸ்:** மருத்துவ வசதிகள் கிடைப்பது மிகவும் குறைவாக உள்ளது. அடிப்படை உரிமைகளை இங்கு பெறுவது கூடச் சிரமம். இங்கே எமது உணர்வுகளுக்கோ, உரிமைகளுக்கோ எந்த மரியாதையும் கிடையாது. எந்தக் குறையையும் கேட்கக் கூடாது. கேட்டால் விடுதலை செய்யமாட்டார்கள் என உளவுத்துறையினர் மறைமுகமாக மிரட்டுவார்கள். அதனாலேயே யாரும் தங்கள் குறைகளைக் கூட கேட்க முடியாமல் அமைதியாக இருந்து விடுவார்கள். அதிகாரிகளைப் பார்ப்பதற்குக் கூடப் போராடித் தான் வரவைக்க வேண்டும். அப்போது போராடுவோர் மீது வழக்குகள் போட்டு மிரட்டுவார்கள். அவசரத் தேவைக்கு இங்கே மருத்துவர்கள் யாரும் இருப்பது கிடையாது. மருத்துவமனை செல்வதானால் மாவட்ட ஆட்சிருக்கு மனு கொடுத்து அவர் ஒப்புதல் வாங்கி தான் செல்ல முடியும். பெரும்பான்மையான நேரங்களில் வழிக்காவல் இல்லையென்று மருத்துவக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும். சாந்தனுக்கு கால்கள் வீங்க ஆரம்பித்து அவரது உடல்நிலையில் தொய்வு ஏற்பட்டு ஒரு வாரத்துக்கு பிறகு எழுந்து நிற்க கூட முடியாத நிலையில் தான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். இப்படி அடிப்படை மருத்துவ தேவைகள் கூட உடனடியாகக் கிடைப்பதில்லை. இந்தச் சிறப்புமுகாமில், ஜனவரி 28 ஆம் திகதி ஒரு பெரியவர் மாரடைப்பால் இறந்து போனார். இப்படியான அவசரகாலங்களில் நாங்கள் என்ன செய்யமுடியும்? இப்படி ஏதாவது அவசர மருத்துவத் தேவை இருந்தால், நாங்கள் சிறப்புமுகாமில் காவலில் இருக்கும் சட்டம் ஒழுங்கு காவல் அதிகாரிக்கு சொல்லி, அவர் வருவாய் துறை அதிகாரிக்கு சொல்லி, அவர் சிறப்பு முகாமுக்கான மாவட்ட தனித்துணை ஆட்சியருக்கு சொல்லி, அவர் மாவட்ட ஆட்சியருக்கு சொல்லி இறுதியில் மாவட்ட ஆட்சியர் மேலிடத்தில் பேசிவிட்டு சொல்கிறேன் என்பார்.

சிறையில் அப்படி இல்லை. அங்கே எந்த நேரத்திலும் மருத்துவர்கள் இருப்பார்கள். உடனுக்குடன் சிகிச்சை பெறலாம். இங்கே அது போல இல்லாததால் மிகுந்த சிரமப்படுகிறோம்.

**கே: சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கு ஆவணங்கள் இருந்தும் அவரை அனுப்புவதற்கு ஏன் தாமதம் ஏற்பட்டது? உங்களை வெளியே அனுப்பாமல் இருப்பதற்கு என்ன காரணம் கூறப்படுகிறது?**



ராஜீவ்காந்தி கொலை வ
நடந்துகொண்டிருந்தபோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்களை
# நோயாளிகளாக்கியது
# ப்பு முகாமே!

என்னைக் குடும்பத்தோடு சேர்ந்துவாழ வழி செய்யுங்கள்

நேர்கண்டவர் : பொ.சோபிகா

வண்டிய அவலம்

## இரும்புக்கம்பிகளுக்குப் பின்னிருந்து ஒலிக்கும் றொபேர்ட் பயஸின் கோரிக்கைக் குரல்

**றொபேர்ட் பயஸ்:** நாம் இங்கே வந்ததும் ஒவ்வொருவரிடமும்' நீங்கள் எந்த நாடு போகப் போகின்றீர்கள்?' எனக் கேட்டார்கள். நாம் அயல்நாட்டில் உள்ள உறவினர்களிடம் போக உள்ளதாகச் சொன்னோம். சாந்தன் மட்டும் தான் தனது சொந்த நாட்டுக்குப் போக விரும்புவதாகச் சொன்னார். சொந்த நாட்டுக்குப்போக விருப்பம் தெரிவித்தும் ,பாஸ்போர்ட் உள்ளிட்ட ஆவணங்கள் இருந்தும் அவரை நாட்டுக்கு அனுப்பி வைக்க எந்த ஏற்பாடும் செய்து கொடுக்கவில்லை. அரசு நினைத்திருந்தால் அவரை உயிருடன் நாட்டுக்கு அனுப்பி வைத்திருக்கலாம். ஆனால் அதற்கான எந்த ஒழுங்கும் செய்யவில்லை. 02.02.2024 அன்று சாந்தன் நாட்டுக்கு திரும்புவதற்கான ஆவணங்கள் தமிழ்நாடு அரசுக்கு கிடைத்தது. இதன்மீது இந்திய அரசின் அனுமதி கோரி 09.02.2024 அன்றுFRROவுக்கு தமிழ்நாடு அரசு கடிதம் எழுதியிருக்கிறது. 22.02. 2024 அன்று சாந்தனை நாட்டுக்கு அனுப்புவதற்கான இந்திய அரசின் அனுமதி கிடைத்திருக்கிறது. 28.02. 2024 அன்று சாந்தன் மருத்துவமனையிலே சிகிச்சை பலனின்றி உயிரிந்தார். இந்த நடவடிக்கையில் இருந்து மற்றவற்றை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

**கே: இந்தத் தாமதங்களுக்கு யார் பொறுப்பு? எந்தத்தரப்பு கூடுதல் பொறுப்பை ஏற்கவேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்? இலங்கை, இந்திய மத்திய அரசுகளா? இந்திய மாநில அரசா?**

**றொபேர்ட் பயஸ்:** தமிழக மாநில அரசு நினைத்து இருந்தால் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து விரைந்து அனுமதி வாங்கி அனுப்பி வைத்திருக்கலாம். அதே நேரத்தில் இந்திய மத்திய அரசும் மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று விரைந்து செயற்பட்டு இருந்தால் சாந்தன் உயிருடன் வீட்டுக்குச் சென்றிருப்பார். இலங்கைப் பிரஜை என்பதால் இலங்கைத் தூதரகத்தில் இருந்து திருச்சி சிறப்பு முகாம் வந்து பார்த்துப் போவதற்கான ஒழுங்குகளைச் செய்து இருக்கலாம். ஆனால் இலங்கைத் தூதரகத்தில் இருந்து யாரும் வரவில்லை. முறைப்படி வந்து பார்க்க வேண்டும். இங்கே இருக்கும் வேறுநாட்டவர்களை பார்க்க அந்த நாட்டுத் தூதரக அதிகாரிகள் வந்து சந்தித்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்கிறார்கள். அதுபோல இலங்கைத் தூதரகமும் செய்திருந்தால் இதுபோல நடந்திருக்காது. ஒட்டுமொத்தத்தில் எல்லோரினதும் அலட்சிய போக்கே சாந்தன் உயிருடன் இலங்கை வர முடியாமல் போனமைக்கு காரணம்.



லை வழக்கு
ந்தபோது....

**கே: தமிழக ஊடகங்கள், சாந்தன் 'முன் விடுதலை' செய்யப்பட்டார் எனக் கூறுகிறார்கள். தண்டனைக்காலத்துக்கு முதல் விடுபவர்களை வேண்டுமானால் முன்விடுதலை எனக்கூறலாம். ஆனால், தூக்குத் தண்டனையில் இருந்து ஆயுள்தண்டனைக்கு மாற்றப்பட்டு இரட்டை ஆயுள் தண்டனை அனுபவித்தும், நீதிமன்றம் உத்தியோகபூர்வமாக விடுவித்தும், இதுவரை உங்கள் விடுதலை சாத்தியமில்லாமல் இருப்போரை முன்விடுதலை பெற்றவர்களின் பட்டியலுக்குள் உள்ளடக்குவது சரியா?**

**றொபேர்ட் பயஸ்:** ஆயுள் தண்டனை என்பது ஒருவரின் இறுதி மூச்சு வரை சிறையில் இருக்க வேண்டும் என இந்திய தண்டனை சட்டம் வரையறுக்கிறது. ஆனால் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் அரசியல் அமைப்பு சட்டம் 161 அதிகாரம் வழங்கி உள்ளதன் அடிப்படையில் நன்னடத்தையுடன் இருக்கும் ஆயுள் சிறைவாசிகளை குறிப்பிட்ட ஆண்டுகளில் விடுதலை செய்கிறார்கள்.
இதற்கு முதலில் அறிவுரைக் கழகம் மூலமாக ஐந்து பேர் கொண்ட குழு அமைத்து 14 ஆண்டு நிறைவடைந்த ஒருவரின் நன்நடத்தை மற்றும் வழக்கின் தன்மைகளை ஆராய்ந்து அறிக்கை பெற்று, அதனை பரிந்துரைத்து ஆளுநருக்கு அனுப்பி வைப்பார்கள். அவர் கையெழுத்துப் போடுவதே வழக்கம். அப்படி விடுதலை செய்யப்படுவதை முன் விடுதலை என்று சொல்லுவார்கள்.
எமது வழக்கில் தூக்குத் தண்டனை வழக்கு உச்ச நீதிமன்றத்தில் வாதத்துக்கு வந்த போது காலதாமதம் மற்றும் சிறையில் இருந்த போது எல்லோரும் காலத்தை வீணாக்காமல் பட்டயப் படிப்புகள் படித்து ஒழுக்கத்தோடு இருந்ததால் இதையெல்லாம் கவனத்தில் கொண்டு தூக்குத் தண்டனையை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்ததுடன், சில சட்டப் பிரிவுகளின் படி அரசு எங்களை விடுதலை செய்யலாம் எனவும் தீர்ப்பு வழங்கியது. அந்த அடிப்படையில் தான் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்களின் அரசால் ஏழுபேரையும் விடுதலை செய்யலாம் என சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
இதை எதிர்த்து முன்னைய காங்கிரஸ் அரசு மேல்முறையீடு செய்ததால் அப்போது விடுதலை தாமதமானது. அதன் பிறகு பல சட்டப்போராட்டம் நடத்தி 'ஆளுநர் காலதாமதம் செய்தது சட்டப்படி தவறு' என உச்சநீதிமன்றம் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்தது. அந்தத் தீர்ப்பை முன்னுதாரணமாக கொண்டு நீதியரசர் கவாய் தலைமையிலான அமர்வு மீதமிருந்த ஆறுபேரையும் விடுதலை செய்தது. இதைத் தான் தமிழக ஊடகத்தார் ' முன் விடுதலை' என்று சொல்லுகிறார்கள்.

**கே: ஆவணங்கள் இல்லாத அகதிகளை சிறப்பு முகாமில் வைப்பதாக இந்திய அரசு கூறுகிறது. ஆவணம் இல்லாத பல இலங்கையர்கள் சாதாரண அகதிமுகாம்களில் இருக்கிறார்கள். நீங்கள் விடுதலையாகியவுடன் அகதிமுகாம்களில் இருப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட வில்லையா? அல்லது கேட்டும் அனுமதி கிடைக்க வில்லையா?**

**றொபேர்ட் பயஸ்:** நாம் விடுதலை செய்யப்பட்டுத் தான் சிறப்புமுகாமில் அடைக்கப்பட்டோம். ஆவணங்கள் இல்லாமல் அடைத்து வைக்கப்படவில்லை. ஜெயக்குமார், முருகன் ஆகிய இருவரும் தமிழ்நாட்டுப் பெண்களை திருமணம் செய்து உள்ளார்கள். அவர்கள் குடும்பம் தமிழ்நாட்டிலேயே இருக்கும் போது எதற்காக அவர்கள் இருவரையும் சிறப்பு முகாம் எனும் சித்திரவதை முகாமில் அடைக்க வேண்டும்? அவர்களை அவர்கள் குடும்பத்தோடு சேர்ந்து வாழவிடலாம் தானே? ஆவணங்கள் இல்லாதவர்களை அடைத்து வைத்திருப்பது என்று சொல்வது தவறான தகவல். இங்கே நிறையப் பேர் வழக்கு முடிந்தும் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். பாஸ்போர்ட் வழக்குக்காக பலவருடங்கள் சிறையில் இருக்கிறார்கள். தண்டனை கொடுத்தால் கூட அந்தளவு காலம் முகாமில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் சிறையில் இருந்தபொழுது சென்னை உயர்நீதி மன்றத்தால் 'பரோல்' பெற்று ஒரு மாத காலம் எனது வழக்குரைஞர் தடா சந்திரசேகரனின் மகனார் வீட்டில் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

**கே: சாந்தனின் இழப்பை ஒரு படிப்பினையாகக் கொண்டு, சிறப்புகாமில் இருக்கும் உங்கள் மூவரின் (ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ், முருகன்) விடுதலைக்காக ஈழத்தமிழர்கள், அரசியல்வாதிகள் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?**

**றொபேர்ட் பயஸ்:** ஒட்டுமொத்த தமிழ் மக்களினுடைய உள்ளக்கிடக்கையாக தான், அவர்களின் தொடர் சட்டபூர்வ செயல்பாட்டின் ஊடாகத்தான் எங்களின் விடுதலை சாத்தியமாயிற்று. ஆனால், அந்த விடுதலைக் காற்றை சுவாசிக்க முடியாமல் சிறப்பு முகாமில் அடைபட்டிருக்கும் நிலையில் , அதிலிருந்தும் விடுபட தமிழக, இந்திய அரசுகளை வலியுறுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டும். அதேபோல ஈழத்தமிழர்களும் அரசியல் அழுத்தங்களை கொடுத்து விடுதலையைச் சாத்தியப்படுத்த வேண்டும். தமிழ் எம்.பி.க்கள் நாம் விரும்பும் நாடுகளுக்கு அனுப்பி வைக்க வலியுறுத்தி இலங்கை நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும். இலங்கை அரசின் மூலமாகவும், எம். பி.க்கள் நேரடியாகவும் இந்திய, தமிழக அரசுகளுக்கு அழுத்தம் தர வேண்டும்.தொடர் அழுத்தங்கள் இருந்தால் மட்டுமே எமது விடுதலை சாத்தியமாகும்


**கே: நீங்கள் எங்கு செல்ல விரும்புகிறீர்கள் ? இலங்கைக்கா? வெளிநாட்டுக்கா? இலங்கைக்குத்தான் நீங்கள் செல்லமுடியும் என்ற கருத்துள்ளது அது உண்மையா? உங்களுடன் கைது செய்யப்பட்டவர்களில் பலர் விடுதலையாகி, அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். நீங்கள் போக முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்? திட்டமிட்டு தடுக்கப்படுகிறதா?**

**றொபேர்ட் பயஸ்:** நாம் இங்கே சிறப்பு முகாம் வந்ததும் எந்த நாட்டுக்கு போக போறீர்கள் என இங்கே உள்ள


(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவுக்கும் பருத்தித்துறைக்கும் என்ன தொடர்பு?




○ தி.ராஜ்



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக வடக்கு மீனவர்கள் மிக அண்மைக்காலமாக அதி உச்சமாகப் போராடுகின்றார்கள். கடந்த வாரம் கடலில் இறங்கிப்போராட்டம், இந்தியத் துணைத்தூதரகத்தை நோக்கிய பேரணி என்று மீனவர்களின் போராட்டம் விரிவடைகின்றது. தொப்புள்கொடி உறவுகள் என்று தமிழகத்தைச் சொல்லிக் கொண்டாலும் அந்த உறவைத் துண்டாடும் நிலைக்கு இரு நாட்டு அரசுகளும் இரு தரப்பு மீனவர்களையும் தள்ளுகின்றனவா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை. ஈழத் தமிழர்களுக்காக எப்போதும் குரல்கொடுத்தது தமிழக மக்கள் தான். ஈழப்போராட்டத்துக்காக எத்தனையோ வழிகளில் அவர்கள் உதவியிருக்கின்றார்கள். இந்த நிலையில் தமிழகத்தையும் ஈழத்தமிழர்களையும் பிரித்து வைத்திருக்கும் கடலால் அவர்களைப் பிரிப்பதற்கு இரு நாடுகளும் நிச்சயம் முயற்சிக்கும். எப்போதும் ஈழத்தமிழரும், தமிழகமும் ஒன்றாக இருப்பது ஆட்சியாளர்களுக்கு உவப்பானதாக இருக்கப் போவதில்லை. அரசுகளின் நினைப்புகள் இதுவாக இருக்கையில், இரு தரப்பு மீனவர்களும் அந்த அரசுகளுக்கு வெறும் வாய்க்கு அவல் அள்ளிப்போடுவதைப் போன்று செயற்படக்கூடாது. அதற்காக மீனவர்களுக்கு பிரச்சினையில்லை என்று சொல்லமுடியாது. தமிழக மீனவர்கள் வடக்கு கடலுக்குள் அத்துமீறி வருகின்றனர். அவர்களின் இந்த அத்துமீறல் என்பது போர் முடிந்த பின்னர்தான் நடக்கின்ற ஒன்றல்ல. சமாதானக் காலத்தில் 2002 ஆம், 2003 ஆம் ஆண்டுகளிலும் அது நடந்திருக்கின்றது. ஆனால் அப்போது ஒன்றிரண்டு சம்பவங்களாவே நடந்தன, இப்போது பல நூறு சம்பவங்களாக நிதமும் நடக்கின்றன.

**அத்துமீறலுக்கு என்ன காரணம்?**

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒடுங்கிய கடற்பரப்பு இருப்பதனால் தான் தமிழக மீனவர்கள் அத்துமீறுகின்றனரா என்ற கேள்விக்கு நிச்சயம் பதில் 'இல்லை' என்பதுதான். அப்படி ஒடுங்கிய கடற்பரப்பு காரணமாகத்தான் அத்துமீறுகின்றார்கள் என்றால், யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கிழக்கு - சுண்டிக்குளம் பருத்தித்துறை வரையில் அவர்கள் எல்லை தாண்டி வரத்தேவையில்லை. எனவே இதைத்தாண்டிய காரணம் இருக்கின்றது என்பதுதான் உண்மை. தமிழக மீனவர்கள் இழுவைமடி வலையைப் பயன்படுத்தியே கடற்றொழில் செய்கின்றனர். இதைப் பயன்படுத்துவதால் அதிகளவில் மீன்களைப் பிடிக்கலாம். ஆனால் சில வருடங்களிலேயே மீன்களே இல்லாத கடலையே அது உருவாக்கும். இழுவைமடி என்பது கடலின் ஆழம் வரையில் சென்று அங்குள்ள மண் பாறைகள் உட்பட அனைத்தையும் அள்ளக்கூடியது. இதனால் சிறு மீன்கள் உட்பட மீனின் உற்பத்திக்குத் தேவையான அனைத்தையும் இழுவைமடி அள்ளிச் சிதைத்து விடும். இந்தத் தொழில்முறையால் தமிழகத்தைச் சூழவுள்ள கடற்பரப்பில் இன்று மீன்கள் இல்லை. இதனால்தான் அருகிலுள்ள வடக்குக் கடலை நோக்கி வருகின்றனர்.

இதே இழுவைமடியுடன் வந்து தமிழக மீனவர்கள் மீன்பிடித்தால் இன்னும் சில ஆண்டுகளில் தமிழகக் கடலைப்போன்று எமது வடக்குக் கடலும் மீன் இல்லாமல் வெறிச்சோடிவிடும். இதனடிப்படையிலேயே வடக்கு மீனவர்கள் தமிழக மீனவர்களின் அத்துமீறலை எதிர்க்கின்றனர். இந்தப் புரிதல்கள் எவையும் இந்தியத் தலைவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பாக இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வடக்கு மீனவர்களைச் சந்தித்திருந்தார். இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் முறையிட்ட போது, 'இந்திய மீனவர்கள் 3 நாள்களும், இலங்கை மீனவர்கள் 3 நாள்களும் மீன்பிடியில் ஈடுபடட்டும். ஒரு நாள் ஓய்வு நாள்' என்றுதான் தீர்வை முன்வைத்தார். பிரச்சினையின் அடிப்படையையே விளங்கிக்கொள்ளாமல்தான் அவ்வாறு ஒரு தீர்வை முன்வைத்திருந்தார். ஆனால் இப்போது பிரச்சினை என்ன என்பதை விளங்கிக்கொண்டாலும் அதைத் தீர்ப்பதற்கு இந்தியா முன்வரவில்லை என்பதே யதார்த்தம். தமிழக மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லாட்சிக் காலத்தில் இந்தியாவிடம் முறையிட்டபோது, 'முதலில் உங்கள் நாட்டில் இழுவைமடியைக் கட்டுப்படுத்துங்கள். அதைச் சட்டரீதியாகத் தடை செய்யுங்கள்' என்று கூட்டமைப்புக்கு கூறப்பட்டது. அதனடிப்படையில்தான் இழுவைமடியை சட்டரீதியாகத் தடைசெய்யும் சட்டம் இலங்கையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்தியா தனது மீனவர்களைக் கட்டுப்படுத்தவில்லை. ஆனால் காலத்துக்கு காலம் தமிழகத்தில் தேர்தலின் போது மாத்திரம் கச்சதீவை மீட்கும் கோஷம் முன்வைக்கப்படும். அதுவும் தமிழக மீனவர்கள் சிலர் கைதாகினால் அங்கு மீனவர்கள் போராட்டம் நடத்தும் போது கச்சதீவு மீட்பை முன்னிறுத்துவார்கள். கச்சதீவை மீட்டால் தமிழக மீனவர்கள் அத்துமீறமாட்டார்களா? கச்சதீவைக் கோருபவர்கள் நெடுந்தீவு அல்லது அதனை அண்டிய பகுதிக்கு வருவது சரி. பருத்தித்துறை முனை வரையில் ஏன் வருகின்றார்கள்? எனவே கச்சதீவை மீட்டால் கூட இந்தப் பிரச்சினை தீராது என்ற யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். வல்லரசாகும் கனவில் இருக்கும் இந்தியாவுக்கு தனது கடல் எல்லையைக் கூட கண்காணிக்கமுடியவில்லையா என்ற வடக்கு மீனவர்களின் கேள்வி நியாயமானதே.

எல்லை தாண்டும் தமிழக மீனவர்களை இந்தியக் கடலோரக் காவல்படையே கட்டுப்படுத்தினாலே போதுமே. ஆனால் அதைச் செய்யவில்லை. இந்த விவகாரத்தில் இலங்கையும் மேம்போக்காகவே நடக்கின்றது.

வடக்கு மீனவர்களின் அழுத்தம் அதிகரித்தால் சாக்குப்போக்குக்கு ஓரிரு படகுகளைக் கைது செய்வது ஏனைய நேரங்களில் கண்மூடி இருப்பது என்று காலத்தைக் கடத்துகின்றது.

மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆயிரம் வழிகள் இருந்தும் அரசுகள் அதைச் செயற்படுத்தவில்லை. அவர்கள் செயற்படுத்தப்போவதுமில்லை.

திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது என்பதைப் போல தமிழக மீனவர்களாகப் பார்த்து திருந்தாவிட்டால் இந்த அத்துமீறல்களும், வடக்கு மீனவர்களுடனான வார்த்தைப் போர்களும் உச்சம் பெற்று தொப்புள்கொடி உறவுதான் துண்டாடப்படும். ■

## வானத்திலிருந்து...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

கவரும் காட்சிப் பொருளாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்கே ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஒரு காலம் துர்க்கனவாகக் காணப்பட்ட பதுங்குகுழி, இப்பொழுது ஃபொக்ஸ் விருந்தினர் விடுதியில் காட்சிப் பொருளாகப் பராமரிக்கப்படுகின்றது. அது ஒரு விருந்தினர் விடுதியின் விளம்பர உத்தி.

ஆனால் முற்றவெளியில் நடப்பது என்ன? ஒருகாலம் தமிழ்மக்களின் தலைகளின் மீது மலத்தைக் கொட்டிய கொலைக் கருவிகளும் கொலை வாகனங்களும் இப்பொழுது முற்றவெளியில் காட்சிப்பொருள்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஒரு தொகுதி 'யுயூ- டியூப்பர்கள்' அதை ஒளிபரப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த மாற்றம் மேலோட்டமானது என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. போர் ஒரு விளைவு. அது மூலகாரணம் அல்ல. மூலகாரணம் இன ஒடுக்குமுறையாகும். இன ஒடுக்குமுறை எங்கிருந்து வருகிறது? தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள மறக்கும் பொழுது தான். தமிழ் மக்களின் தேசிய இருப்பை அழிக்க முற்படும் பொழுதுதான் இன முரண்பாடுகள் ஆயுத மோதலாக மாறின. எனவே போர் ஒரு விளைவு. இன ஒடுக்குமுறைதான் மூலகாரணம். அது இப்பொழுதும் உண்டு.

கண்காட்சியில் கலந்துகொள்ளும் படைப் பிரதானிகளின் பாதுகாப்புக்காக நடுப்பகல் வேளைகளில் பலாலி வீதி நீட்டுக்கும் பிரதான சந்திகளில் படையினர் நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

இந்தக் கட்டுரை எழுதப்படுகையில், வெடுக்குநாறிமலையில் சிவராத்திரியை அனுஷ்டிப்பதற்கு தமிழ்மக்கள் போராட வேண்டியிருக்கிறது. இன முரண்பாடுகளை நீக்கும் விதத்தில் இனப்பிரச்சினைக்கு இன்றுவரையிலும் தீர்வு வழங்கப்படவில்லை.

இப்போதுள்ள ஜனாதிபதி அதை வடக்கின் பிரச்சினை என்று வர்ணிக்கிறார். அவருக்கு முன்பிருந்த கோத்தாபய அதனை பொருளாதாரப் பிரச்சினை என்று வர்ணித்தார். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த 15 ஆண்டுகளின் பின்னரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. அவ்வாறு தீர்வு காணப்படுவதற்குரிய அரசியல் திடசித்தம் சிங்கள - பௌத்த அரசுக் கட்டமைப்பிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே போரின் மூல காரணங்கள் அப்படியே இருக்கத் தக்கதாக, யுத்தவெற்றியின் நினைவுச் சின்னங்களைப் [illegible] போர் வாகனங்களையும் காட்சிப் பொருள்களாக கண்காட்சியில் வைப்பது என்பது. போர் தொடர்பான கொடுமையான நினைவுகளை மறக்கச் செய்யும் உள்நோக்கமுடையது. மிலன் குந்தேரா கூறுவதுபோல "அதிகாரத்துக்கு எதிரான மனிதர்களின் போராட்டம் எனப்படுவது மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டமே" மாணவர்களுக்கு ஞாபகசக்தி இருக்க வேண்டும். அது கற்றலுக்கு அவசியம். அதைவிட அவசியம், தமது சொந்த வரலாற்றை மறந்து விடாமலிருக்க.

ஈழத்தமிழர்கள் தாயகத்துக்கு வெளியே அதிக தொகையில் வாழும் நாடு கனடா. அங்கு இனப்படுகொலையை நினைவுகூர்ந்து அது தொடர்பான அறிவை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் நோக்கோடு இனப்படுகொலை அறிவூட்டல் வாரம் ஒன்றை அந்த நாட்டின் அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

அதாவது அடுத்தடுத்த தலைமுறை தமிழ்ப் பிள்ளைகளுக்கு இனப்படுகொலை தொடர்பாக அறிவூட்டவே இப்படி ஓர் ஏற்பாடு. ஆனால் தாயகத்தில் இனப்படுகொலை புரிந்ததாக தமிழ் மக்கள் குற்றம் சாட்டும் ஒரு படைத்தரப்பின் விமானங்களை தமிழ் மாணவர்களே "எங்களுடைய விமானங்கள்" என்று கூறுகிறார்கள். ஆயின், தமிழ் மக்கள் அரசியல் ரீதியாகவும் தோற்கடிக்கப்படுகின்றார்களா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடித் தேடி தொலைதல்

○ கோகுலராகவன்

வாழ்க்கையில் எதையோ தேடிக்கொண்டிக்கின்றோம். இதுவே அடிப்படைப்பிரச்சினை.தேடிய பின் ஏதோ ஒன்று கிடைக்குமல்லவா. கிடைத்த பின் அதை கணக்கிலெடுப்பதில்லை. இன்னொன்றைத் தேடத்தொடங்கிவிடுவோம். இதனால்தான் உலகில் பல மதங்கள் தோன்றின.

ஒரு மதம் இன்னொரு மதத்தை பழித்துக் கொண்டு புதிதாக உருவெடுக்கும். புதிய மதம், முன்னர் இருந்ததைத் தாண்டி நல்ல மதமாக வரவேமுடியாது.

காரணம் மதத்தைப் பின்பற்றுபவன் மனிதனல்லவா. உலகின் மதங்களுக்கு பல கிளைகள் இருக்கின்றன.இவையாவும் மனிதனால் ஆக்கப்பட்டவை. மாறாக கடவுளால் ஆக்கப்பட்டவை அல்ல. இன்னும் சொல்லப் போனால் தன்னைக் கடவுளாக்கியவரால் ஆக்கப்பட்டவை. மனிதன் தன்னுடைய குணத்தை மாற்றாதவரை மதத்தால் எதுவும் ஆகப்போவதில்லை. எல்லா மதங்களும் போதிய நல்வழிச் சிந்தனைகளை வைத்திருக்கின்றன. ஆனால் யாரும் அவற்றைப் பின்பற்றுவதில்லை. ஒரு குரு ஒன்றுக்கும் உதவாத தன் சீடனிடம் ,

"ஒவ்வொருநாளும் குறைந்தது ஒரு நல்ல காரியமாவது செய்" என்று சொன்னார்.

மறுநாள் சீடன் வந்தான்.

"நல்ல காரியம் செய்தாயா"?

"ஆம் இரண்டு செய்தேன்"

குருவுக்கோ ஆச்சரியம் .

"அப்படியா நல்லது. என்ன செய்தாய்?"

"வீதியில் கிடந்த கல்லை ஓரமாகப் போட்டேன்."

"சிறப்பு ,சிறப்பு! மற்றது?"

"தலையில் காயம் பட்டவரை மருத்துவமனையில் சேர்த்தேன்."

"மிக அருமை. நல்ல மாற்றம். சரி அப்பனே அவனுக்கு காயம் எப்படி வந்தது? "

" நீங்கள் ஒவ்வொருநாளும் ஒரு நல்லகாரியம் செய்யச் சொன்னீர்கள். ஆனால் மாலையாகியும் என்ன நல்ல காரியம் செய்வதென்று தெரியவில்லை. அந்தக் கோபத்தில் வீதியோரமாக குந்தியிருந்த மனிதன் மீது அங்கிருந்த கல்லைத் தூக்கிப் போட்டேன், பின்னர் அவனை மருத்துவமனையில் சேர்த்தேன்"


குருவுக்குத் தலை சுற்றியது.

"மகனே நீ நல்ல காரியம் செய்யாமல் இருப்பதே நல்ல காரியம்" என்றாராம்.

இன்றைய மனிதனின் மனோபாவம் இதுதான். சுவாமி இராமகிருஷ்ணர்.சுவாமி விபுலானந்தர் ஆகியோர் உலகுக்கு அற்புதமாக வழிகாட்டினார்கள்.

அந்த வழியைப் பின்பற்றி வாழ்ந்தவர் எத்தனை பேர்?


திருக்குறளை உலக சந்தையில் விற்பதற்கு முனைகிறோமே தவிர அதைப்பின்பற்ற யாரும் தயாராயில்லை. ஒரு பொருளைப் பயன்படுத்தி அதன் உபயோகத்தை உயர்த்திக் காட்டுவதே அதற்கான அதி உச்ச விளம்பரம். நாம் உற்பத்தி செய்த பொருளை நாம் பயன்படுத்தாமல் இன்னொருவனைப் பயன்படுத்தக் கேட்டால் நடக்குமா? இதில் திருக்குறளுக்கு 'உலகப் பொதுமறை' என்ற பெயர் சூட்டி ஒரு 'புலுடா' வேறு. எம்மிடம் உள்ள தவறே இது தான்.மேலைத் தேயம் கொண்டாடினால்தான் அது சிறந்த பொருள்.




திருவாசகத்தை போப் ஐயர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பின் தான் "அட இது எங்கட சரக்கு " என்ற பிரக்ஞை வந்து சேர்ந்தது. இங்கே நல்ல மனிதனாக வாழ உசாத்துணை எதுவும் தேவையில்லை.உசாத்துணை தேடித்தேடியே வாழ்வின் காலம் முடிகின்றது. சமயம் சார் நூல்களின் தேவைப்பாடுகள் தாண்டி ,வெள்ளாந்தியான மனிதர்களைக் கண்டிருக்கிறேன். அவர்கள் வாழ்வின் இரகசியம் என்ன?

தேடவேண்டும்.

> **மனிதன் தன்னுடைய குணத்தை மாற்றாதவரை மதத்தால் எதுவும் ஆகப்போவதில்லை. எல்லா மதங்களும் போதிய நல்வழிச் சிந்தனைகளை வைத்திருக்கின்றன.ஆனால் யாரும் அவற்றைப் பின்பற்றுவதில்லை.**



# உணர்ப்தினம்



பாகம் 2

30

○ இராகவன்

அண்டைக்கு நடந்த பட்டிமன்றப் போட்டியில நவம் மாஸ்ரர் நல்ல சிநேகிதபூர்வமா நடந்துகொண்டார். ஒவ்வொரு பிரிவுக்கும் தீர்ப்பு வழங்கேக்குள்ள என்னையும் ஒராளா மதிச்சு என்ர கருத்தையும் கேட்டுத்தான் செய்தவர். ஒண்டிலையும் தன்னிச்சையா முடிவெடுக்கேல்ல. இதுதானே பெரிய மனிசருக்கு அழகு! இந்த இடத்தில இன்னுமொரு விசயத்தையும் சொல்லோணும். 1990 களில வடமராட்சியில மட்டுமில்லை யாழ்ப்பாணம், தென்மராட்சி எண்டு எல்லாவிடத்திலும் ரியூசன் 'பீல்டில' நல்ல பேமஸாயிருந்த ஓர் ஆசிரியர். அவரிட்ட நானும் படிச்சிக்கிறன். அவர் அந்தப் பாடத்தைப் படிப்பிக்கிறதுக்கெண்டே பிறந்தவர் எண்டு பொடியள் கதைப்பாங்கள். அவர் படிப்பிக்கேக்குள்ள வகுப்பிலயிருந்தால் காணும். பிறகு படிக்கத் தேவையில்லை. அந்தளவுக்கு மனதில் பதிஞ்சிடும் எண்டளவுக்கு வெரிரலன்ற்ரான ரீச்சர். அவர் எங்கட நவம் மாஸ்ரரின்ட மாணவன்தான். அதுகும் வலு நெருக்கமான மாணவன். அந்த நெருக்கத்தில நவம் மாஸ்ரர் 'பியூசி' ரியூசன் நடத்தேக்குள்ள அவரையும் அதில படிப்பிக்கவிட்டவர். கொஞ்சக்காலம் எல்லாம் நல்லாத்தான் போச்சுது. பிறகு நவம் மாஸ்ரரோடு ஏதோ ஒரு முரண்பாடு வந்திட்டுது. ஒருநாள் நவம் மாஸ்ரர் அந்தாளை ரியூட்டறியில வைச்சே அடிச்சுக் கலைச்சிட்டார். என்ர இதுவரை கால வாழ்நாளிலயும் நவம் மாஸ்ரரைப் போல ஒரு சாதுவான ஆளை நான் காணேல்ல. அதைப் போல அவரைப் போல ஒரு கோபக்காரனையும் காணேல்ல.

என்ர வாழ்க்கையில இன்னொரு நவத்தைப் பற்றியும் நான் சொல்லவேணும். இந்த நவத்தின்ர பெயரும் நவரத்தினம்தான். இவர் வெளியாக்களுக்கு நவம் மாஸ்ரர். எனக்கு நவண்ணா. என்ர பக்கத்து வீட்டுக்காரன். என்ர வாழ்க்கையில தவிர்க்கமுடியாதவொரு முக்கியத்துவம் வாய்ந்த மனிதன். என்ர ஒம்பது,பத்து வயதிலயிருந்து இண்டை வரைக்கும் ஆளோட பிளங்கியிருக்கிறன். தனது பலவீனங்களை வெளிப்படையாக என்னோடு கதைக்கக் கூடிய ஒராளாக நவண்ணா இருந்திருக்கிறான்.

ஊருக்குள்ள எனக்கும் என்னோட்டப் பொடியளுக்கும் நல்ல முசுப்பாத்திக்காறனாக அவனிருந்திருக்கிறான். நாங்களெல்லாம் அவனது தீவிர ரசிகர்களாகவேயிருந்தோம். வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களையும் அவன் எங்களுக்கு நடத்தையால் கற்பித்துக் காட்டினான் எண்டும் சொல்லலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# எங்களை...



அதிகாரிகளும் உளவுத்துறையும் கேட்டபோது நாம் அயல்நாட்டில் இருக்கும் எனது உறவினர்களிடம் போக விரும்புவதாக எழுதிக் கொடுத்தோம். இந்திய அரசு எம்மை இலங்கைக்குத் தான் அனுப்ப முடியும் என நீதிமன்றத்தில் சொல்லி உள்ளது. அப்படிச் சொல்லி இருந்தாலும் எமது வழக்கில் இருந்து விடுதலையான பலர் பல நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அப்படியான நிலையில் இந்திய அரசு இதுபோன்று சொல்வது வியப்பாக உள்ளது. நாம் இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு பல முன்னுதாரணங்கள் இருந்தும் அதனைப் பொருட்படுத்தாமல் இலங்கைக்கு தான் அனுப்புவோம் என்று சொல்வது ஏற்புடையதாக இல்லை.

எமது நாட்டுக்கு வருவது என்பது எனது கனவு. ஆனால், எனது மகனை, தாயை, சகோதரிகளை பிரிந்து 33 வருடங்கள் ஆகிறது. எந்த வயதில் எனது மகனை நான் பிரிந்தேனோ அந்த வயதில் எனக்கு ஒரு பேரன் இருக்கிறான். அவனைக் காண வேண்டும் ஒருமுறையாகிலும். பிறிதொரு நல்ல சூழ்நிலை வரும்போது கண்டிப்பாக நாட்டுக்கு வருவேன்.

**கே: சிறை மற்றும் சிறப்புமுகாம் வாழ்வில் உங்கள் குடும்பத்தினரை சந்திக்கவில்லையா?**

**றொபேர்ட் பயஸ்:** சிறைவாழ்க்கையை ஒவ்வொரு காலங்களாகப் பிரிக்கலாம். சிறையில் பல கொடுமைகளையும், வேதனைகளையும் சந்தித்து இருக்கிறோம். ஆரம்ப காலங்களில் ராஜீவ் கொலை வழக்கில் இருந்ததால் விதிகளுக்கு புறம்பாக நடத்தப்பட்டோம். எப்போதும் கம்பிகளுக்கு உள்ளேயே அடைக்கப்பட்டோம். மற்றவர்களுக்கு பொருந்துகிற சட்டம் எமக்குப் பொருந்தாது. சிறை பற்றி முழுமையாக புத்தகம் மூலம் சொல்ல விரும்புகிறேன்.

இப்போதோ சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட நாள் முதல் சிறுசிறு தேவைகளுக்கும் ஆட்சியாளரை நம்பியே வாழ வேண்டும்.

அம்மாவும் சகோதரிகளும் ஒருமுறை வந்து பார்த்தார்கள். எனது மனைவி 2011 இல் வந்து பார்த்தார். அப்போது எனது மகனுக்கு உடல் நலம் சரியில்லாததால் முறைப்படி அனுமதி பெற்று தமிழ்நாட்டில் சிறிது காலம் நின்றார்கள். பின்னர் இலங்கை போனவர்களுக்கு இன்று வரை இந்தியத் தூதரகம் விசா வழங்க மறுக்கிறது. சென்னை உயர்நீதிமன்றம் விசா கொடுக்க பரிசீலனை செய்ய உத்தரவிட்டும் இந்தியத் தூதரகம் அவர்களுக்கு விசா வழங்கவில்லை. நீண்ட காலம் குடும்பத்தை பிரிந்து வாழ்வதோடல்லாமல் விரும்பிய நாட்டுக்கும் போக முடியாமல் அவதிப்படுகிறோம்.

**கே: பலவருடமாக சட்டப்போராட்டத்தை தொடர்ந்த வண்ணம் உள்ளீர்கள். உங்களுக்கும் உங்களுடன் இருந்தவர்களுக்கும் ஆரம்பத்தில் இருந்து ஆத்மபலமாக இருந்தவர்கள் யார்?**

**றொபேர்ட் பயஸ்:** இந்த வழக்கில் நான் கைதான போது எனது மனைவி, தங்கை ஆகியோரைத் தவிர எனக்கு தமிழ்நாட்டில் யாரையும் தெரியாது. அவர்களுக்கும் இங்கு யாரையும் தெரியாது. நான் கைதான போது அவர்களையும் கைதுசெய்து கொண்டு வந்து விட்டார்கள். ஒரு சில நாள்களில் அவர்களை விடுதலை செய்தாலும் சி.பி.ஐ. பொலிஸார் தினமும் வீட்டில் போய் விசாரணை என்ற பெயரில் தொந்தரவு செய்தார்கள். கேட்பதற்கு யாரும் இல்லாமல் நாதியற்றவர்களாக நின்றார்கள். எனக்கு வழக்குரைஞர் ஒருவரைக் கூட நியமிக்க அவர்களுக்குத் தெரியவில்லை. சில மாதங்களில் அவர்களையும் கைது செய்து சைதாப்பேட்டை சிறையை சிறப்பு முகாமாக மாற்றி அங்கே அடைத்தார்கள்.

என்னை முதல்முதலாக ஜியாவுதீன் என்ற வழக்குரைஞர் வந்து பார்த்தார். அவர் மூலமாக வழக்குரைஞர் கலைமணி வந்தார். வந்தவர்கள் தொடர்ந்து நீடிக்கவில்லை. சில காலங்களில் காணாமல் போய்விட்டார்கள்.

நீண்ட இழுத்தடிப்புகளுக்கும் சிறை மாற்றங்களுக்கு பிறகும் பூந்தமல்லி சிறையில் அடைத்து வழக்கு விசாரணை தொடங்கியது. அப்போது நான் கேட்காமலே 'தடா' சந்திரசேகரன் எனக்காக வாதாட வந்தார். எனக்கு அவரைத் தெரியாது. ஆனால் அவர் ஆஜராகி வாதிட்டார். சாந்தன் உட்பட ஒன்பது ஈழத்தமிழர்களுக்கும் அவர்தான் வழக்கு நடத்தினார். மீதிப் பேருக்கு ராமதாஸ் ஐயா, துரைசாமி மற்றும் வழக்குரைஞர்கள் வாதிட்டார்கள்.

இறுதியில் இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 26 பேருக்கும் நீதிமன்றத்தால் 28.01.1998 அன்று தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அப்போது எம்மை அண்ணன் 'தடா' சந்திரசேகரன் ஆறுதல்படுத்தி 'மேல்முறையீடு போவோம். அதில் நாம் வெற்றி பெறுவோம்' என நம்பிக்கை கொடுத்தார். அதேபோல நெடுமாறன் ஐயாவிடம் பேசி ஒழுங்குகள் செய்தார். நெடுமாறன் ஐயா மற்றும் அமைப்புகள் இணைந்து 'இருபத்தியாறு பேர் உயிர் பாதுகாப்புக் குழு' அமைத்து நிதி திரட்டினர். 'தடா' சந்திரசேகரனின் சீனியர் மூத்த வழக்குரைஞர் என்.நடராஜனை எமது வழக்கை நடத்த நியமித்து வழக்கையும் நடத்தினார்கள். அப்போது இருவர் எமக்காக தமது தாலியைக் கூட கொடுத்து உதவியதை எப்போதும் மறக்கமுடியாது.

கீழமை நீதிமன்றத்தில் ஆஜராகிய அனைத்து வழக்குரைஞர்களும் மேல் முறையீட்டின் போதும் உதவினார்கள். மேல்முறையீட்டின்போது நீதிபதிகள் தடா நீதிமன்றத் தீர்ப்பை 'நீதிப்படுகொலை' என்று விமர்சனம் செய்து, இந்த வழக்குக்கு தடா பொருந்தாது என்று கூறி 19 பேரை விடுதலை செய்தனர். ஆனால், தடா பொருந்தாது என்று கூறிய அதே நீதிமன்றம் அந்தத் தடாவின் கீழ் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களை மட்டும் எடுத்துக்கொண்டு மீதம் மூன்று பேருக்கும் ஆயுள் தண்டனையும் நால்வருக்கு தூக்குத் தண்டனையும் அளித்து தீர்ப்பளித்தது.

அதன் பிறகு ஒவ்வொருவரும் தூக்குத் தண்டனையை குறைக்க ஒவ்வொரு வழிகளிலும் போராடினார்கள்.

உச்சநீதிமன்றத்தில் வழக்குரைஞர் பிரபு ராமசுப்பிரமணியம், தூக்குத் தண்டனையை ரத்துச் செய்ய பேரறிவாளனுடன் இணைந்து தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தார். நளினிக்கு தமிழக அரசு தூக்குத் தண்டனையை ரத்துச் செய்தபோது மற்றவர்களின் தூக்குத் தண்டனை உறுதியானது. பல்வேறு காலகட்டங்களிலும் ஒவ்வொரு ஜனாதிபதிக்கும் கருணை மனுக்கள் அனுப்பப்பட்டு அவைகள் கிடப்பில் போடப்பட்டு நீண்டகாலக் காத்திருப்பின் இறுதியில் அவைகள் நிராகரிக்கப்பட்டு தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டு நாளும் குறிக்கப்பட்டது. அப்போது தமிழ்நாடே மூவர் உயிர் காக்க எழுச்சி கொண்டது. அதன் உட்சபட்ச போராட்டமாக தங்கை செங்கொடி தன் உயிரையே தீக்கிரையாக்கி மூவர் உயிர்காத்தார்.

அடுத்த நாளே அப்போதைய முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் மூவர் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யவேண்டும் என சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

அதற்கடுத்த நாள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு வந்தபோது வழக்குரைஞர்கள் பிரபு ராமசுப்பிரமணியம் மற்றும் பாரிவேந்தன் ஆகியோர் பல மூத்த வழக்குரைஞர்களை அழைத்து வந்து வாதிட்டு தூக்குத் தண்டனையை நிறுத்தி வைக்க இடைக்கால உத்தரவு வாங்கினார்கள்.

நீண்டகாலத் தாமதத்துக்கு பிறகு உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணை வந்த போது ராம்ஜெட்மலானி, கோபால் சங்கரநாராயணன், யுக் மோஹித் சவுத்ரி, கொலின் கோன்சால்வ்ஸ் ஆகிய வழக்குரைஞர்கள் ஆஜராகி வாதிட்டதால், தூக்குத் தண்டனை ரத்தானது.

இதற்கிடையில் வழக்கினை விசாரித்த விசாரணை அதிகாரிகளும், தீர்ப்பினை வழங்கிய நீதியரசர்களும் இந்த வழக்கில் நடந்த குழறுபடிகளை வெளிக்கொணர்ந்து, நாங்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று தங்கள் கருத்துகளைப் பதிவிட்டார்கள்.

தூக்குத்தண்டனை ரத்தான போதும் ஜெயலலிதா அம்மையாரால் எம்மை விடுதலை செய்யக்கோரி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை எதிர்த்து காங்கிரஸ் மேல் முறையீடு செய்ததால் விடுதலை தாமதமானது. இருந்தும் பேரறிவாளன் மற்றும் வழக்குரைஞர் பிரபு ராமசுப்பிரமணியம் ஆகியோரின் முயற்சியால் விடுதலை வழக்கு விசாரணை வந்தது .அப்போது மூத்த வழக்குரைஞர் கோபால் சங்கர நாராயணன் வாதிட்டு பேரறிவாளனின் விடுதலையை சாத்தியப்படுத்தினார். அந்தத் தீர்ப்பில் ஆளுநர் நடவடிக்கைகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன.

இந்தத் தீர்ப்பு மற்ற ஆறுபேருக்கும் பொருந்தும் என்பதால் நான், சாந்தன், ஜெயக்குமார் ஆகியோரை விடுவிக்கக் கோரி சட்டத்தரணி பிரபு வழக்கைத் தொடர்ந்தார். அவர் சார்பாக மீண்டும் மூத்த வழக்குரைஞர் கோபால் சங்கரநாராயணன் வாதிட்டார். ரவிச்சந்திரன், நளினி, முருகனுக்கு வேறு வழக்குரைஞர்கள் வாதிட்டார்கள். ஏற்கனவே அறிவுக்காக கோபால் வாதிட்டதால் அவர் வாதத்தை ஏற்று 11.11.2022 அன்று ஆறுபேரையும் உச்சநீதிமன்றம் விடுதலை செய்தது.

நளினி, ரவிச்சந்திரன் ஆகியோரை தவிர்த்து மற்றைய நான்கு பேரும் 12.11.2022 அன்று சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டோம்.

ஆரம்ப காலங்களில் சிறையில் சிரமப்பட்டதைவிட விடுதலையான பிறகு மோசமான சூழ்நிலை வருமென கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை. ஆரோக்கியமான நிலையில் வந்த நாம் நோயாளியாக ஆக்கப்பட்டோம். இன்று சாந்தனை இழந்து நிற்கிறோம்.

நானும் ஜெயக்குமாரும் மதுரை உயிர்நீதிமன்றத்தில் எம்மை விடுதலை செய்யக்கோரி வழக்குரைஞர் ரூபஸ் மூலமாகத் தொடுக்கப்பட்ட வழக்கில் தீர்ப்புத் திகதி சொல்லாமலே பல மாதங்கள் கிடப்பில் உள்ளன.

எங்கள் எழுவரின் விடுதலைக்காக அயராது உழைத்ததில் அற்புதம் அம்மாளின் பங்கு அளப்பரியது. தற்போது இங்கு தங்கியிருந்து எனக்கான சட்ட உதவிகளை வழக்குரைஞர் நரேஸ்குமார் நேரடியாகக் கவனித்துவருகிறார். மேலும், இங்கே உள்ள அரசியல்வாதிகள் எமது விடுதலைக்கு குரல் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு சிலர் எப்போதும் துணையாக இருந்து வருகிறார்கள். சிலர் எம்மை மறந்தே போய்விட்டார்கள். இவர்களைப் பற்றி நான் பிறிதொரு சமயம் விரிவாகச் சொல்கிறேன். பொதுவாக உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்கள் எமது விடுதலையை நேசித்தே வந்தார்கள். மேலும் எமது குடும்பத்தாரும் நண்பர்களும் எமக்குத் துணையாக நின்றுள்ளார்கள். இனிவரும் காலங்களிலும் எமது உறவுகள் எமது விடுதலையை சாத்தியப்படுத்த முனைய வேண்டும் என்பதே எனது அவா.

## சிறுவர் கைவண்ணம்



உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com



அ.நிதுஷனா
தரம் - 8 F
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை



பி.சித்திரன்
தரம் - 6
இணுவில் சிவகாமி
அறநெறி பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org